ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

# 'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)



பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,

(ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)

…சிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்

பிரசுரம் செய்யப்படுவது.

1936-ஹு டிஸம்பர்-மீ [ மார்கழி-மீ

SL
உ௨௱௨11, A1355
A136·2·12
189901

# விஷயம்.


| | | | |
|---|---|---|---|
| 1. | தயாசதகம் | [தொடர்ச்சி] | 137—158 |
| 2. | கோதாஸ்துதி | [தொடர்ச்சி] | 31—34 |
| 3. | ஓர் விண்ணப்பம் (உத்தமூர். தி. வீரராகவாசாரியர்). | | 1—4 |
| 4. | ரக்ஷாவிமர்சம் | [தொடர்ச்சி] | 13—16 |


# விஜ்ஞாபனம்.

ஆநீதாம் த்வ நிஜாக்ஷரேண:- இதில் 'த்வ' வென்று இவர் [illegible]மம். இவரது வாக்குசனி எம்பெருமானாரையும் பிடிக்கப்பார்க்கிறது. க்ருபாரூக்ஷமான இவர் வாக்விசேஷம் யதிராஜசந்த்ரனைப் பிடிக்கப் பார்க்கிறது. ஆனால், அவர் உபராமதர்ப்ரமர். தமக்கு வ்யாக்யாதாவென்ன ஸமுத்ராதீர்த்தத்திற்கு அம்ருதத்தைக் காட்டிலும் வை[illegible]ண்யமும், மற்ற பாஷ்யங்களைக் காட்டிலும் தம்முடைய பாஷ்யத்தின் வ்யதிரேகமும் 'த்வ' சப்தத்தின் அர்த்தம். ச்ருதப்ரகாசிகையின் முதல் வாக்யங்களையும், தத்டீகையையும் பார்த்துத் தெளிக. 'இங்கே எல்லா விசேஷணங்களிலும் வையதிரேக்யபர்யவஸானத்தை யோஜிக்கலாம்' என்று தத்த்வடீகை. 'த்வ' என்பதை ப்ரதீகமாக எடுத்து வ்யாக்யானம் காணுததால் இவருக்கு விள்ளவில்லை. என்ன பாண்டித்யம்?

ஹாஸவிகஸ்வரயா:— இங்கே பஹுவ்ரீஹி என்பதை அறியாமல் பொருளுரைத்ததாக இவர் பரிஹாஸம். 15-ம் பக்கத்தில் 'மலர்ச்சிகளை அடைந்த புத்திகளையுடைய' என்று பதவுரையால் பஹுவ்ரீஹி ஸ்பஷ்டம். 16-ல் அவதாரிகையில் 'உன்னுடைய ஒரு கடாக்ஷத்தைப் பெற்றுத் தேன் பொழியும் பல வாக்குகள் ப்ரவஹிக்கும்' என்றுளது, அந்த வாக்குக

---

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்த

தயாசதகம்

(தயாசதகம்).

ஸ்ரீ-உப-வே.

அன்பில், வெ கோபாலாசார்யஸ்வாமியால்

அருளிச்செய்யப்பட்ட

எளிய தமிழ் வ்யாக்கியானத்துடன்

கூடினது.

---


ஸ்ரீரங்கம்

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷணஸபை [illegible]

சித்திரகூடம்

ப்ரொபஸர். ராமாநுஜாசார்யஸ்வாமியின்

வேண்டுகோளுக்கிணங்கி

கும்பகோணம்

ஸ்ரீகோமளாம்பா அச்சுக்கூடத்தில்

அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தாது வரு கார்த்திகை மீ.

1936


விலை] [ரூபாய் 1

18998



நான் துஷ்டத்தனம் பண்ணுல் உனக்கு விளையாட்டுத் தாமரைகளான ஸ்ரீநிவாஸன் கடாக்ஷங்களால் என்னைத்தொட்டு உங்கள் வசமாக்கு என்றூர். நீயே நீண்ட வலையாக நீண்டு என்னைப் பிடித்து உங்கள் வசமாக்கு என்றூர். யானையைக்கட்டிப் பிடித்து பழக்கிவைத்திருந்தாலும், எந்த வேளையில் மதம் பிடிக்குமோ, என்ன துஷ்டத்தனம் பண்ணுமோ, அடங்காமல் நம்மையே தாக்குமோ என்று நடுக்கமாகவேயிருக்கும். அதுபோன்ற யானையாகத் தம்மை வர்ணிக்கிறூர். கடாக்ஷத்தால் தொட்டு வசப்படுத்த முடியாது. வலைவீசிப்பிடிக்க முடியாது. மதம் பிடித்தால் பின்னலே தெரியாமல் வந்து கெட்டிச்சங்கிலிகளால் கட்டித்தான் அடக்கி நிறுத்தவேணும். காட்டிலேயுள்ளதை அரண்மனைக்குக் கொண்டுவந்து என்ன உபசாரம் செய்துவந்தாலும் யானை காட்டு ஸஞ்சாரத்தை நினைக்கும், இங்கேயிருப்பதையே வெறுக்கும், கோபமடையும், திமிறிஓடப்பார்க்கும். அடிக்கடி மதமும் பிடிக்கும். ஒரு ஸமயத்தில் ஆனைப்பாகன் கண்ணுலே விழித்து மிரட்டினுலும், கோழை மனதாய் பயப்படும். நீ கடாக்ஷித்தாலும் நான் மனோதைர்யமில்லாமல் நல்லொழுக்கத்தில் உறுதியில்லாமல் வழுவுகிறேன். யானையை எத்தனை மிரட்டி அடக்கினுலும் ஓர் ஓர் ஸமயத்தில் அடங்காமல் கொழுப்பாகவேயிருக்கும். அதுபோல நீ அடக்கிவைத்திருந்தாலும் ஓர் ஓர் ஸமயத்தில் அடங்காமல் கொழுப்புடையேன். நன்றுய்க் குளிப்பாட்டி உடம்பை சுத்தம் செய்தாலும் திரும்பவும் ஆசையாய்ப் புழுதியை உடனே மேலே வாரியிரைத்துக்கொள்ளும். ஸ்ரீநிவாஸன் தயையாகிய கங்காநதியில் நான் ஸ்நாநம் செய்தபிறகும், பாபருசியால் பாபச்சேற்றைப் பூசிக்கொள்ளப் பார்ப்பேன். யானையைப் பாகன் எத்தனை ஆதரவோடும் லாலனை செய்துவந்தாலும், நடுவே நடுவே திடீரென்று பயங்கரமாகி பயத்தை விளைவிக்கும். நான் இப்படிக்கொத்த யானை ஸ்வபாவமாயிருந்தாலும், திரும்பவும் விஷயக்காடுகளை நினைத்துக்கொண்டு ஓடப்பார்த்தாலும், துஷ்டத்தனம் செய்யப் பார்த்தாலும், எனக்கு மதம் பிடித்தாலும், உன் யானையானதால், காணுன்னை வேண்டாமென்று விலக்கினுலும், நீ எனக்குத் தெரியாமல் பின்னுல் வந்து என்னை சங்கிலிகளால் கட்டி உன் வசமேயிருக்கச்செய்யவேணும். நல்லொழுக்கத்தில் நிறுத்தவேணும்.

'த்வத்வாரணம்' என்பதற்கு இரண்டுபொருள். 1. உன்யானையை 2. உன்னை வேண்டாமென்று தடுப்பவனை. 'அநுக்ரஹம்' என்பதற்கு அநுக்ரஹ கடாக்ஷமென்றும், பின்னால் வந்து க்ரஹிப்பது என்றுமிரண்டுபொருள். முன்னாலே சங்கிலியைக் கொண்டுவந்து பிடிக்கமுடியாது. மலையரசனுக்கு ஆனைக்காடுகளிலிருக்கும் ஆனைகளைப்பிடித்து அரண்மனையில் பழக்கி அடக்கிக் கட்டிவைத்திருப்பார்கள். மதம் பிடிக்கும்போது அதைச் சங்கிலிகளால் பிடித்து ஓடாமல் துஷ்டத்தனம் செய்யாமல் கட்டிவைக்கவேணும். முன் ச்லோகத்தில் ஸாஹஸத்தில்ருசியைத்தொலைக்கவேணும் என்றார். என் விஷயருசியைத் தொலைக்கக்கூடாமற் போனாலும், துஷ்டத்தனம் செய்யாமல் என்னைக் கெட்டிச்சங்கிலிகளால் கட்டிவைக்கவேணுமென்கிறார். முன் ச்லோகத்தில் விஷயம் விஷமெனப்பட்டது. இங்கே விஷயம் மதயானைமேயுங்காடென்றும், விஷயருசி மத்தகஜத்தின் மதமென்றும் கூறப்படுகிறது. (99)

[illegible]

நாத: பரம் கிமபி மே த்வயி நாதனீயம்
மாதர்தயே மயி*குருஷ்வ ததா ப்ரஸாதம் I
பத்தாதரோ வ்ருஷகிரி ப்ரணயீ யதாஸௌ
முக்தாநுபூதிமிஹ தாஸ்யதி மே முகுந்த: II (100)

(ப-ரை) மாதர்தயே - அம்மா தயையே! மே-எனக்கு, த்வயி - உன்னிடத்தில், அத: பரம் - இதற்குமேல் (நான் கேட்கப்போகிறதற்குமேல்) நாதநீயம் - ப்ரார்த்திக்கவேண்டியது, கிமபி ந - ஒன்றுமில்லை, வ்ருஷகிரிப்ரணயீ - வேங்கடமலை வாஸத்தில் ப்ரியமுடைய, அஸௌ முகுந்த: - மோக்ஷமளிக்கும் இந்த ஸ்ரீநிவாஸன், பத்தாதர: - என்னிடம் ப்ரீதி வைத்து, முக்தாநுபூதிம் - நித்யவிபூதியில் முக்தர்கள் அநுபவிக்கும் ஆநந்தாநுபவத்தை, இஹ - இங்கே, யதா தாஸ்யதி - எப்படிக் கொடுப்பாரோ, ததா - அப்படி, மயி - என்னிடம், ப்ரஸாதம் - தயவை, குருஷ்வ - நீ செய்ய



" அம்மா தயையே, நான் இதோ ப்ரார்த்திக்கப் போவதற்குமேல் உன்னைக் கேட்கவேண்டியதெனக்கொன்றுமில்லை. வேங்கடமலையில் மிக்க ஆதரவுடன் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீநிவாஸனென்னும் முகுந்தன் என்னிடத்தில் ப்ரீதி வைத்து இங்கேயே (திருமலையிலேயே) எனக்குத் திவ்யமான பரமபதத்தில் முக்தர்கள் அநுபவிக்குமாநந்தத்தை எப்படி அநுபவிக்கக்கொடுப்பரோ அப்படி நீ என்விஷயத்தில் அநுக்ரஹிக்கவேணும்".

(தா-ம்) இது நூறுவது ச்லோகம். சதகம் முடிகிறது. நாடகங்கள் முடிவில் 'இன்னமென்ன ப்ரியம் உனக்குச் செய்ய வேண்டுமென்று' அநுக்ரஹிக்கும் பெரியோரொருவர் கேட்பர். ஸ்ரீஸ்துதியில் 'கிந்தே பூய: ப்ரியமிதி கில ஸ்மேரவக்த்ரா விபாஸி' 'இன்னமென்ன ப்ரியத்தை உனக்குச் செய்யவேண்டு'மென்றபேக்ஷிக்கிறயென்று கேட்பதுபோல புன்னகையோடு ஸேவைஸாதிக்கிறாய் என்று ஸாதித்தார். இங்கும் தயாதேவி பெரிய பிராட்டியாரேயாதலால் அப்படியே 'இன்னமென்ன வேண்டும்' என்று கேட்கிறதுபோல அபிப்பிராயத்தைக் காட்டி 'இதொன்றுதான் கேட்கிறேன், இதற்குமேல் ஒன்றும் வேண்டாமம்மா' என்கிறார். பெரியபெருமாளை அபீதிஸ்தவத்தில் 'உம் திருமேனியை ஸர்வ காலமும் ஸேவித்துக்கொண்டு, இந்தப் பூலோகவைகுண்டத்திலேயே முக்தர்கள் ஆநந்தத்தையும் அநுபவித்து வாழவேணும் என்று ப்ரார்த்திக்கிறேன். மற்றொன்றும் வேண்டேன்' என்றார். அங்கேயும் 'முகுந்த' என்று பெருமாளை அநுபவித்தார். அங்கே 'புவி முகுந்த' என்று சேர்த்துப் படித்ததால் பூலோகத்தில் பெரிய பெருமாள் 'அச்சுவை தரும் முகுந்தன்' என்று திருவுள்ளம். 'முகுந்தன்' என்பதற்கு 'மோக்ஷமளிப்பவன்' என்பது பொருள். மோக்ஷமென்பது எல்லையற்ற ஆநந்தம். பூமியில் அதை அளிக்கும் முகுந்தன் புவி முகுந்தன். இப்புவியிலேயே முக்தர் நிர்வ்ருதியடைவேனாக என்பதும் கருத்துத்தான். இரண்டிடத்திலும் ஓட்டிக்கொள்ளலாம். அதுபோல இங்கும் 'இஹ முகுந்த:' என்று ஓட்டிக்கொள்ளலாம். 'அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றபடி அநுபவம். "[illegible]............[illegible]" "சோகத்தால் தொந்த என் அங்கங்களால் எப்படி என் நாயகனை ஆசை தீரத் தழுவுவேனோ, அப்படி நீயென் விஷயத்தில் தயை செய்யவேண்

மும்” என்று ஸீதை எத்தனை ஆவர்த்தியோடு ப்ரார்த்தித்தாளோ அப்படியே தமக்கு திருவேங்கடமுடையான் ஸம்ச்லேஷத்தில் ஆர்த்தி என்பதை ‘யதா ததா வா ஸதாம் த்வயி ஸம்ஸ்ருஷ்ட’ என்பதால் ஸூசிக்கிறார். தாம் வாஸம் செய்யும் அசேதநமான கிரியினிடமே மிக்கப்ரணயம்செய்பவர், நான்மனமார ஆசைப்பட்டால் என்னிடத்தில்ப்ரணயம்கொண்டு, நீங்காத ஆதாரமுடையவராயிரார் என்பதை ‘ஸமாச்ரயேதா வ்ருஷகிரிவிபூஷணாய’ என்பதால் ஸூசிக்கிறார். ‘ஸஹஸா’என்பதால் இந்த நூறு ச்லோகங்களைக் கேட்டருளியஸ்ரீநிவாஸன் ஆநந்தபரவசராய் ஸேவைஸாதித்து எதிரே நிற்கிறாரென்றும் காட்சியின் ஸூசனம். ‘அத்ரைவ ஸஹ ஸதி’ என்ற ச்ருதியை அநுஸரித்து ‘அத்ரைவ ஸஹ ஸவாஸி’. ‘இங்கே திருமலையிலேயே அம்ருதனாகக்கடவேன்’ என்று ப்ரார்த்தனை. அவன் நம்மிடம் ஆதரபந்தம் செய்வதால், நம் பந்தம் எல்லாமுடனே தொலையும் என்றும் ஸூசனம். நூறு ச்லோகம் பாடி முடிகையில் ‘தயே’ ‘தயே’ என்று தம் விஷயத்தில் ஓர் பஹுமதி தம்மை அறியாமல் உண்டாகிறது. ஸ்தோத்ரபாரம் தாண்டியதனால் வந்த தைர்யஸந்தோஷங்கள். ‘தாயே’ ‘தயையே’என்று இங்கே முடிவில் கூப்பிடுகிறார்.

நிஸ்ஸீமவைபவஜுஷாம் மிஷதாம் குணாநாம்
ஸ்தோதுர்தயே வ்ருஷகிரீசகுணேச்வரீம் த்வாம் ।
தைரேவ நூநம் அவசைரபிநந்திதம் மே
ஸத்யாபிதம் தவ பலாதகுதோபயத்வம் ॥ ௧0௧ ॥

நிஸ்ஸீமவைபவஜுஷாம் மிஷதாம் குணாநாம்
ஸ்தோதுர்தயே வ்ருஷகிரீசகுணேச்வரீம் த்வாம் ।
தைரேவ நூநம் அவசைரபிநந்திதம் மே
ஸத்யாபிதம் தவ பலாதகுதோபயத்வம் ॥ (101)

(பதவுரை) தயே - தயையே! நிஸ்ஸீமவைபவஜுஷாம் - எல்லையற்ற வைபவத்தை (ப்ராக்ரமத்தை) உடைய, குணாநாம் - (பெருமாளுடைய) மற்ற குணங்கள், மிஷதாம் - (கண் கொட்டாமல்) விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கையில்; வ்ருஷகிரீசகுணேச்வரீம் த்வாம் - வேங்கடேச்வரன் குணங்களுக்கு ஈச்வரியான உன்னை, ஸ்தோதுர் மே - ஸ்தோத்திரம் செய்யும் என் விஷயத்தில், தைரேவ - அந்த குணங்களாலேயே, அவசை: - அவசமாக, (தம்மை அறியாமல்) அபிநந்திதம் - அபிநந்திக்கப்படுகை, (இதனால்) தவ பலாத் - உன் பலத்தைமுன்னிட்டு, அகுதோபயத்வம் - ஒருவரிடத்திலும் பயமற்றிருப்பது என்னும் நிர்ப்பயத்வம் (ஸித்திப்பது), நூநம் ஸத்யாபிதம் - நிச்சயமாய் ஸத்யமென்று ஸ்தாபிக்கப்படுகிறது.



“அம்மா தயையே! எல்லையற்ற பராக்ரமத்தை உடைய மற்ற குணங்களெல்லாம் விழித்துப் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, வேங்கடேச்வரனுடைய குணங்களுக்கு ஈச்வரியான உன்னைத் துதிசெய்யும் என்விஷயத்தில் அவசமாக அந்தக் குணங்களாலேயே ஸந்தோஷத்தையே காட்டுவதாயிருக்கிறது. இதனால் உன் பலத்தை முன்னிட்டு ஒருவரிடத்திலிருந்தும் அஞ்ச வேண்டாதபடி ஸர்வதா நிர்ப்பயத்வம் ஸித்திப்பது நிச்சயமாய் உண்டாக்கப்படுகிறது”.

(தா-ம்) சதகம் முடிந்தது. 100-ச்லோகமாயிற்று. பெருமாளுடைய சக்தி, தேஜஸ் முதலிய மற்ற குணங்களெல்லாம் இந்த ஸ்தோத்ரத்தைப் பக்கத்திலிருந்து விழித்துக்கொண்டே கேட்டுக்கொண்டிருக்கின்றன, ஒருச்லோகங்கூட இந்த சதகத்தில் அவைகளைத் துதிக்காமல் முழுவதும் உன் துதியாக முடிந்தது. ஸர்வசக்தித்வம், ஸர்வஜ்ஞத்வம், தேஜஸ், வீர்யம், பலம், ஐச்வர்யம் முதலிய குணங்களுக்கெல்லாம், தம்மைத் துதிக்காமலுன்னையே துதிப்பதால் கோபம்வரவில்லை. கோபமில்லாதது மட்டுமல்லாமல் முழுவதையும் எல்லா ப்ரகாரமாயும் பூர்ணமாக அபிநந்தனம் செய்கிறார்கள். ஆநந்தபரவசமாய் அபிநந்திக்கிறார்கள். ஸ்வைரம் செய்துகொண்டே அநுபவிக்கிறார்கள். அவர்களுடைய வைபவம் எல்லையற்றதாயிருந்தாலும், உன்னைத் துதித்தால் அவர்களுக்கு ஈர்ஷ்யையேயில்லை. வ்ருஷகிரிக்கு ஈசனான பெருமாளுடைய குணங்களுக்கு நீ ஈச்வரியானதால், உன் ப்ரஜைகளான குணங்களுக்குத் தங்கள் அரசியைத் துதிக்கையில் ஈர்ஷ்யை முதலியதற்கு ப்ரஸக்தியேயில்லை. பெருமாளுடைய ஆநந்தம் முதலிய குணங்களை மறிந்து உபாஸித்தால், ‘எக்காலும் அஞ்சுகிறதில்லை, ஒன்றுக்கும் பயப்படுவதில்லை’ என்று உபநிஷத்துப் பேசுகிறது. ‘ஒருகாலும், ஒருவரிடமிருந்தும், ஓரிடத்திலும்

அவனுக்குப் பயமேற்படாது' என்று அபிதிஸ்தவத்தில் சொன்னேனம்மா. அந்த அபீதி பெருமானுடைய தயையாகியவுன்னாலே தானே உண்மையாகுமம்மா. உன் பலமில்லாமற்போனால் பயத்திற்கு எல்லையிருக்குமோ, ஒழிவிருக்குமோ. அபாரதிசக்ரவர்த்தியான எங்களுக்குக் குற்றங்களைப் பொறுப்புவிக்கும் உன் பலத்தால்தானே அச்சம் நீங்கி ஸுகமாயிருக்கலாம். பெருமானிடமிருந்து உலகத்திற்குப் பயம். 'பீஷாஅஸ்மாத்'. பயத்திற்கு ஹேதுவான ம்ருத்யு, வாயு, ஸூர்யன், அக்நி இந்திரன் முதலிய யாவரும் பெருமாளிடம் பயந்து நடப்பவர்கள். பெருமாள் திருவுள்ளத்திற்கு விதேயராய் நடப்பவர். பெருமாள் மனதிற்குள் புகுந்திருக்கும் உன் பலமிருக்கையில் பயத்திற்குக் காரணமில்லை. பெருமாளுடைய மற்ற குணங்களிடத்திலிருந்தும் பயமில்லை; ஏனெனில் நீ அந்தக் குணங்களுக்கு ஈச்வரீ. அவர்கள் உனக்கு வச்யமாயிருப்பவர். உன்னைப்பற்றிப் பாடிய துதியில் அவர்கள் மகிழ்ந்து பரவசராகி என்னிடத்தில் மிக ஸந்தோஷப்படுகிறார்கள். இனி எனக்கு என்ன பயம் ? (101)

𑌅𑌦𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌦𑍍𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌂
𑌆𑌰𑌮𑍍𑌭𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑌿𑌦𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌤𑍁𑌤𑍀𑌨𑌾𑌂 ।
𑌸𑌂𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌸𑍍𑌵𑌪𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑌹𑌣𑌾 𑌸𑌹𑍇𑌥𑌾𑌃
𑌮𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 𑌸𑌾𑌹𑌸𑌮𑌿𑌦𑌂 𑌤𑍍𑌵𑌯𑌿 𑌵𑌨𑍍𑌦𑌿𑌨𑍋 𑌮𑍇 ॥ ॥௧௦௨॥

அத்யாபி தத் வ்ருஷகிரீச தயே பவத்யாம்
ஆரம்பமாத்ரமிதம் ப்ரதமஸ்துதீநாம் ।
ஸந்தர்சிதஸ்வபரநிர்வஹணா ஸஹேதா
மந்தஸ்ய ஸாஹஸமிதம் த்வயி வந்திநோ மே ॥ (102)

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 - வேங்கடமலைப்பிரபுவின் தயையே, 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌂 - உன் விஷயத்தில், 𑌇𑌦𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑍍𑌤𑍁𑌤𑍀𑌨𑌾𑌂 - தமக்கு முந்தியதென்பதில்லாத, அநாதிகளான வேதங்களென்னும் துதிகளுக்கும், 𑌅𑌦𑍍𑌯𑌾𑌪𑌿 - இன்றைக்கும், 𑌆𑌰𑌮𑍍𑌭𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍 - துதிக்க ஆரம்பித்ததோடு மட்டும் நிற்கவேண்டியதான இருப்பே(அமைந்தது) (அப்படிக்கொத்த வர்ணனைக்கெட்டாத மஹிமையையுடைய), 𑌤𑍍𑌵𑌯𑌿 - உன் விஷயத்தில், 𑌮𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 - மந்தபுத்தியான, 𑌵𑌨𑍍𑌦𑌿𑌨𑍋 𑌮𑍇 - (உன்)



ஸ்தோத்திரம் பாடும் வைதாளிகனான என்னுடைய, 𑌤𑌤𑍍 𑌇𑌦𑌂 𑌸𑌾𑌹𑌸𑌂 - அப்படிக்கொத்த (பொறுக்கத்தகாத) இந்த ஸாஹஸகார்யத்தை, 𑌸𑌂𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌸𑍍𑌵𑌪𑌰𑌨𑌿𑌰𑍍𑌵𑌹𑌣𑌾 - பிறரைக் குற்றம் பொறுக்கச் செய்விப்பவளும், தன்னையும் குற்றம் பொறுக்கச் செய்விப்பவளுமாக உன்னுடைய இரண்டு விதஸாமர்த்யத்தைக் காட்டிக்கொண்டு, 𑌸𑌹𑍇𑌥𑌾𑌃 - பொறுப்பாயாக.

"திருவேங்கடமுடையான் தயையே! இன்று ஏற்பட்டது என்பதில்லாமல் அநாதிஸ்தோத்ரங்களான வேதங்களும் ஆரம்பத்தோடு நின்று இன்றைக்கும் ஒரு அடிகூட நகாமாட்டாமல் தொடங்கினதோடு நிற்பதாயிருக்கிறது. அப்படிக்கொத்த உன் விஷயத்தில் புத்திக்குறைவான நான் இப்படித்துதித்த ஸாஹஸத்தை நீயே பொறுத்தருளவேண்டும். பிறர் விஷயத்தில் செய்யப்படும் குற்றங்களை நீ தயையாக அவர்கள் மனதில் புகுந்து பொறுப்பிப்பதுபோல், நீயே உன்விஷயத்தில் உன் துதிபாடகனான நான் செய்த இப்பெருங்குற்றத்தை உன்னையேபொறுக்கும்படி செய்து கொள்ளவேண்டும். பிறரைப் பொறுக்கச் செய்வதற்கு நீ உதவுவதுபோல, உன்னைப் பொறுக்கச் செய்யவும் நீயே உதவுவாயாக.

(தா-ம்) காளிதாஸர் 'ரகுவம்சத்தின் ஆரம்பத்தில் தம்மை மந்தன்' என்று பேசினார். இங்கே ஸ்வாமி அப்படியே தம்மை 'மந்தன்' என்கிறார். எல்லாக்கொடிய குற்றங்களையும் தயை பொறுத்து விடுவாளென்றேன். தயையைத்துதிக்க ஆரம்பித்து நூறுபாட்டுக்கள் நீளமாக மிகத்துணிச்சலாய் பாடித்துதிசெய்து விட்டேனே. வேதங்கள் அநாதியான பகவத்குண ஸ்தோத்ரங்கள். அவைகளுக்கு முந்திய ஸ்தோத்ரங்கள் கிடையாது. வேதங்களோ ஸர்வ விஷயங்களையுமறிந்து நமக்கு அறிவிக்கச் சக்தியுடையன. அவைகள் ஆநந்தம் முதலிய பகவத்குணங்களைத் துதிக்க ஆரம்பித்து "வாக்குகளும் மனமும் எட்ட யோக்யதையில்லாமல் ஆரம்பித்ததோடு நின்றுவிட்டுத் திரும்பிவிடுகின்றன" என்று கைவாங்கி ஊமையாயின. அப்படிக்கொத்த பகவத்குணங்களில் சிறந்தவளான உன்னை அல்பபுத்தியான நான் துதிக்க ஆரம்பித்ததே ஸாஹஸம். ஆரம்பித்தாலும் வேதங்களும் ஆரம்பத்தோடு கைவாங்கின விஷயமே என்பதை நினைத்து அச்சப்

பட்டும் திறந்துவிடாமல், நூறு பாசுரங்கள் நீளமாகப் பிதற்றி விட்டேனே. இதனிலும் கொடிய ஸாஹஸம், பெரிய அபராதம் உண்டோ? நான் எத்தனையோ தீவினைகளை முன்பு செய்தேன் என்று முன்பு சொன்னேன், அதையெல்லாம் பொறுக்கவேண்டும் என்று உன்னைப் ப்ரார்த்தித்தேன். நீயும் பொறுத்துவிட்டாய். பெருமாள் விஷயத்திலும் அடியார் விஷயத்திலும் செய்த அபசாரங்களை எல்லாம் நீ பொறுப்பிக்கச் செய்யவேண்டும் என்று உன்னைப் ப்ரார்த்தித்தேன். அதையெல்லாம் நீ அவர்கள் உள்ளத்தில் புகுந்து பொறுப்பித்தாய். உன் விஷயமாக நான் செய்த இக்கொடிய ஸாஹஸத்தைப் பொறுப்பிக்க நான் யாரைக்கூப்பிடுகிறது. தயையான நீ பிறர்மனதில் புகுந்து குற்றங்களைப் பொறுக்கச் செய்வாய். உன் விஷயத்திலேயே கொடிய குற்றத்தைச் செய்தால், அதில் வேறு யார் வந்து உனக்கு சிபார்சு செய்யக்கூடும். அம்மா உன் விஷயமான குற்றத்தைப் பொறுக்க உன்னைத்தானே ப்ரார்த்திக்கக்கூடும். தயைக்கு சிபார்சு செய்ய இன்னொரு தயாதேவியில்லையே. உனக்கு நீயே தான் சிபார்சு செய்து உன்னைப் பொறுக்கச் செய்யவேணும். 'ஸ்வபரநிர்வஹணம்'. இரண்டுபொருள்களை 'ஸம்பந்தம்' என்னும் தர்மம் சேர்த்துவைக்கும். அந்தப் பொருள்களோடு 'ஸம்பந்தம்' என்னும் தர்மத்தைச் சேர்த்துவைக்க வேறொரு 'ஸம்பந்தம்' என்னும் தர்மத்தைத் தேடமாட்டார். புறப்பொருள்களைக் கூட்டிவைக்கும் சக்தியுடைய 'ஸம்பந்தம்' தன்னையும் தானே கூட்டிவைத்துக்கொள்ளும், இந்த சக்தியை 'ஸ்வபரநிர்வஹணம்' என்பர். தயை தனக்கு இந்த சக்தியுண்டென்று காட்டவேண்டுமென்கிறார். 'நிர்வஹணம்' என்பது 'பலித்தியான நிறைவேறுதலை'ச் சொல்லும். ஸ்தோத்ரம் நிர்வஹணமாயிற்று. 'வந்தி' என்று அரண்மனைகளில் துதிபாடுகிறவருக்குப் பெயர். நான் உன் தனரண்மனையில் உங்கள் பெருமையைச் சாணம் செய்யும் தொழிலில் நீடித்த சேவகமுடையவன். திருவேங்கடமுடையான் ஆஸ்தானகாலங்களில் காதனம் செய்யும் 'கண்டாமணி' யென்று என்னைப் பெரியோர் நினைக்கிறார்கள். நான் உன்னுடைய 'வந்தி' 'பாடகன்'. ஓர் ராஜகுலத்தில் சேவகம் அமர்ந்த பாடகன் நன்றாய்ப்பாடாவிட்டாலும் ராஜா பொறுப்பது உசிதம். உன் சேவகனுடைய பாட்டை நீ கோபிக்கலாகாது. (102



ப்ராயோ தயே த்வதநுபாவமஹாம்புராசௌ
ப்ராசேதஸ ப்ரப்ருதயோऽபி பரம் தடஸ்தா: ।
தத்ராவதீர்ணமதலஸ்ப்ருசமாப்லுதம் மாம்
பத்மாபதே: ப்ரஹஸநோசிதமாத்ரியேதா: ॥ (103)

(பதவுரை) தயே - அம்மா தயையே! த்வதநுபாவமஹாம்புராசௌ - உன் மஹிமையென்னும் மஹாஸமுத்திரத்தில் (அதின் விஷயத்தில்), ப்ராசேதஸ ப்ரப்ருதயோऽபி - வால்மீகிமஹர்ஷி முதலியவர்களும், பரம் - கேவலம் (அடியோடு), தடஸ்தா: - உன்னை இறங்காமல் கரையில் நிற்பவரே, ப்ராய: - என்று சொல்லவேணும், தத்ர - அதில் (அந்த ஸமுத்ரத்தில்), அவதீர்ணம் - இறங்கி, அதலஸ்ப்ருசம் - அடித்தரை அகப்படாமல், ஆப்லுதம் - மேலே மிதக்கும் (அல்லது முழுகினதும் மேலே தள்ளப்பட்ட, அல்லது முழுகின), பத்மாபதே: - லக்ஷ்மீபதிக்கு, ப்ரஹஸநோசிதம் - சிரிப்புக்கு இடமான, மாம் - என்னை, ஆத்ரியேதா: - நீ ஆதரிக்கவேணும் (அநாதரவு செய்யக்கூடாது).

" அம்மா தயையே! உன்னுடைய மஹிமையாகிற பெருங்கடலில் வால்மீகி முதலிய பெரியோரும் இறங்கத் துணியாமல் கேவலம் கரையிலேயே நிற்பவரென்று சொல்லவேணும். அப்படியிருக்க, அந்த மஹாஸமுத்ரத்தில் இறங்கி, தரையை எட்ட முடியாமல் இறங்கின க்ஷணமே முழுகி உடனே வெளிக்கிளம்பி மேலே மிதக்குமென்னைப் பார்த்து பிராட்டியோடுகூடிய ஸ்ரீநிவாஸன் சிரிக்கத் தக்கதாயிருக்கிறது. அவர்கள் சிரிப்புக்குப் பாத்திரமான என்னை நீ ஆதரிக்கவேணும். "

(தாத்பர்யம்) பெருமாள் தயாஸமுத்ரம். தயை ஓரெல்லையில்லாத ஸமுத்ரம். தயையின் மஹிமை ஓர் மஹாஸமுத்ரம். வால்மீகி முதலிய ப்ரக்ருஷ்டமான புத்தியையுடைய பெரியோரும் அந்த ஸமுத்ரத்தில் இறங்கப் பயந்து, இதிஹாஸத்தை நம்மால்

காணமுடியாதென்று அறிந்து, இறங்காமல் கரையிலேயே நிற்பவராயிருக்கிறாரென்று சொல்லவேண்டியிருக்கிறது. 'காகாஸுரனைக் கிருபையால் காப்பாற்றினார்' என்று உன்பேரைச் சொல்லுகிறார். அதோடு நின்றுவிடுகிறார். உன் மஹிமை வாக்குக்கு எட்டாதென்று அதன் வர்ணனத்திலிறங்க பயந்தவர்போலிருக்கிறார். இளங்கன்று பயமறியாது. பாலனாகிய நான் உன் மஹிமை ஸமுத்ரத்தின் ஆழத்தைக் கண்டுபிடித்துத் தரைவரையிலும் போய் மேலே வரலாமென்று ஸாஹஸிகமாக 'அபிஷ்டௌமி' என்று இறங்கினேன். ஆழம் கண்டுபிடிக்கலாமென்று முழுகிறதும் தரைவரையிலும் போவதற்கு அடியோடு இல்லாமல், துளி முழுகினதும் மேலே அலைகளால் தள்ளப்பட்டு மிதப்பதுமாயிருந்தேன். இப்படி அறியாத்தனத்தால் திண்டாடிக்கொண்டிருக்கும் என்னைப் பார்த்து திவ்யதம்பதிகள் பரிஹஸித்துச்சிரிக்க இடமேற்பட்டது; அவர்கள் பரிஹாஸமாய்ச் சிரித்தாலும் நீ என்னைக் கைவிடாமல் ஆதரிக்கவேணும். காக்கை முழுக்கைப்போல் முழுகி முழுகி உடனே எழுந்து மிதக்கும்படியிருந்தது. கொஞ்சமேனும் அடியிற்போக இயலவில்லை. 9-வது ச்லோகத்தில் முதல்முதலில் பெருமாளை வர்ணிக்கையில் வேங்கடத்தில் தடஸ்தராயிருப்பவருக்குப்பெருமாள்ஸ்வயம்வ்யக்தமாக ஸேவைஸாதிக்கிறாரென்றார். 'விஜ்ஞாதம் அவிஜாநதாம்' என்றபடி 'அறியோம்' என்று நினைப்பவரால் 'அறியப்பட்டது' ஆகும். 'நம்மால் அறிய இயலாது' என்று ஆகிஞ்சன்யமுடையார்க்கு 'தம் ஸ்வரூபத்தைத் தாமே காட்டும்'. பயந்து தடஸ்தராயிருப்பவர் அறிவார். ஸாஹஸமாய்த் துணிந்து இறங்குகிறவர் அறியமாட்டார். முதலில் 'தடஸ்தர் ஸேவை காண்பர்' என்றபடி இங்கும் முடிவில் "ப்ராசேதஸர் முதலிய பயந்த தடஸ்தர் நன்றாய்க் காணப்பெறுவார், பஹுமானம் பெறுவர், நான் பரிஹாஸத்தைப் பெறுகிறேன்" என்கிறார்.

வேதாந்ததேசிகபதே விநிவேச்ய பாலம்
தேவோ தயாசதகமேததவாதயந் மாம் ।
வைஹாரிகேண விதிநா ஸமயே க்ருஹீதம்
வீணாவிசேஷமிவ வேங்கடசைலநாத: ॥ ॥ ௧0௪ ॥

வேதாந்ததேசிகபதே விநிவேச்ய பாலம்
தேவோ தயாசதகமேததவாதயந் மாம் ।
வைஹாரிகேண விதிநா ஸமயே க்ருஹீதம்
வீணாவிசேஷமிவ வேங்கடசைலநாத: ॥ (104)



(ப-ரை) வேங்கடசைலநாத: - வேங்கடமலை அதிபதியாகிய, தேவ: - விளையாடும் ஸ்வபாவத்தை உடைய தேவன், பாலம் - சிறுவனாகிய என்னை, வேதாந்ததேசிகபதே - வேதாந்தாசார்யனென்னும் ஓர் பீடத்தில், விநிவேச்ய - ஏற்றிவிட்டு, வைஹாரிகேண - விளையாட்டான, விதிநா - ஓர் முறையாலே, ஸமயே - ஓர் ஸந்தர்ப்பத்தில், க்ருஹீதம் - கையிலெடுத்துக்கொள்ளப்பட்ட, வீணாவிசேஷமிவ - ஒருவிதமான வீணையைப்போல, ஏதத் - இந்த, தயாசதகம் - 'தயாநூறு' என்னும் ஸ்தோத்திரத்தை, மாம் - என்னை, அவாதயத் - பாடச்செய்தார். (படிக்கச்செய்தார்).

"விளையாடும் ஸ்வபாவமுடைய வேங்கடமலையதிபதி தேவன் பாலனாகிய என்னை, (அறியாத பிள்ளையாகிய தூப்புல் பிள்ளையை) வேதாந்தாசார்யனென்னும் ஆசிரியபீடத்தில் ஏற்றிவைத்து, விநோதமுறையில் வீணைக்கட்டையை ஓர் ஸமயத்தில் கையில் எடுத்துக்கொள்ளுவதைப்போல் என்னை (என் முகத்தை) ஓர் உபகரணமாக வாத்யம்போல் வைத்துக்கொண்டு இந்த தயாநூறையும் வாசிக்கும்படி செய்வித்தார்".

(தா-ம்) உன்னைத் துதிக்கும் ஸாஹஸத்தில் நான் ஆழந்தெரியாமலிறங்கி சிரிப்புக்கு இடமானேன் என்றேன். தப்பச்சொன்னேன். இத்துதி பாடினது நானன்று. ஓரசேதநமான வாத்யத்தைக்கொண்டு தம்மிஷ்டமான பத்யங்களை நன்றாகப் பேசும்படி (பாடும்படி) செய்வதுபோல், திருவேங்கடமுடையானென்னை வீணைக்கட்டையைப்போல ஓர் வாத்யமாகக்கொண்டு தம்முடைய ஸ்வந்த ஸாஹித்தியமான இந்நூறு பத்யங்களையும் பாடிவைத்தார். இந்நூறு ச்லோகங்களும் வீணையில் பாடவேண்டிய பத்யங்கள். 107-ம் ச்லோகத்தில் இவையெல்லாம் 'பத்யங்கள்' என்று ஸாதிக்கிறார். 'ம்ருதங்கம்' என்பது ஓர் சிறு தவுலுக்குப்பெயர். அது 'மண்ணுடம்பு', அதுபோல் என் மண்ணுடம்பும் ,ஓர் வாத்யவிசேஷமாயிற்று'. வீணை ம்ருதங்கம் முதலிய வாத்யங்கள் அழகாய் வாசித்தால், அவையெல்லாம் வாசிப்பவன் பெருமை. வாதகன் பெருமை. அசேதனமான வாத்யத்தின் பெருமையன்று, அப்பெருமையில் வாத்யத்திற்குப் பாகமேயில்லை. ஆனால் வாத்யம் அழகாக வாசிப்பதாகப்பேச்சுமட்டும் உண்டு. நான் அசேதந

துல்யன். நான் ப்ரயோஜ்யகர்த்தா; ஹேதுகர்த்தாவல்ல. 'தம்மைத்தாமே கவிபாடினது' என்று சொல்லக்கூடிய ஆத்மஸ்துதிப் பேச்சிற்குக்கூட இங்கே இடமில்லை. உன்னையல்லவோ பாடினர்' இது ஸ்ரீநிவாஸசதகமல்ல, தயாசதகம். ஆகையால் ஸங்கோசமில்லாமலே மனப்போக்குக்குப் பூர்ண அவகாசம் கொடுத்து நிரங்குசமாய்ப் பாடினர். 'புராணகவி' என்று வேதாந்தம் கொண்டாடும் 'ப்ரதமகவி', ப்ரஹ்மாவுக்கும் வேதாந்தோபதேசஞ்செய்த ஆதிகுரு, அவரே முதல் வேதாசார்யன், முதல் வேதாந்தாசார்யன். ஆதிகவி வால்மீகிக்கும் முன் கவி. கீதை பாடிய கவி. வேதாந்தம் செய்தவனும் வேதமறிந்தவனும் நானே' என்றங்கே பாடியவர். அந்த ஆதிவேதாந்ததேசிகர் தூப்புல் பிள்ளையென்னும் ஓர் பிள்ளையைத் தூக்கித் தாமும் யதிபதி யாமுனர் முதலிய பெரியோரும் அலங்கரித்த ஆசிரியபீடத்தில் உட்கார்த்திவைத்துவிட்டார். மூன்றாவது பாதத்திலுள்ளது முழுவதையும் 'என்னை க்ரஹித்துப் பலவந்தமாகத் தூக்கி தம்முடைய ஓர்விசித்ரவிநோத வ்யாபாரமுறையாக ஓர் பெரிய பீடத்தில் அமர்த்திவைத்துவிட்டு' என்று 'பாலனாகிய என்னை' என்பதோடும் சேர்த்து அந்வயித்துக்கொள்ளலாம். 'பாலம்' என்பதால் 'என் ஆசார்யப்ராசார்யர்கள் ஸர்வாதிஸ்வஸ்தம் என்று என்னை 'ஆவாய்பூர்ணாஸ்யதஸுவளை என்று வேதமோதிய ஆசார்ய பரம்பராபீடத்தில் வீற்றிருப்பானாக' என்று என் குழந்தைப் பருவத்தில் என்னை அநுக்ரஹித்தபொழுதே அவர்களநுக்ரஹத்தை ஸத்யமாக்க, உடனே தத்க்ஷணமே (நான் பாலனாயிருக்கையிலேயே) என்னை இப்பதத்தில் பிடித்து வைத்துவிட்டார் என்பது ஸூசிக்கப்படுகிறது. ருஷிகள் வாக்கு அவர்கள் திருவாக்கிலிருந்து வெளிவரும் க்ஷணத்திலேயே அதன் பொருளும் ஓடிவந்து அதோடுகூடி அந்த ஆசீர்வாதத்தை ஸத்யமாக்குமென்றார் பவபூதிகவி. தாமொரு விளையாட்டாக அகிஞ்சனனை என்னை ஆசிரியபீடத்தில் உட்கார்த்திவைத்துவிட்டபடியால், அதை உண்மையாக்கவேண்டிய சுமை அவர் தலையிலேறிவிட்டது. என்னை 'வேதாந்தாசார்யபட்டத்தில்' ஏற்றிவைத்துவிட்டதை உண்மையாக்க என்ன செய்யலாம் என்று நன்கு ஆலோசித்து, உன்னைப்பற்றி இந்நூறு பத்யங்களையும் என்முகமாகத் தாமே பாடி, " அப்பா அர்ஜுனா எழுந்திராய், வில்லைக் கையிலெடு, அக்ஷௌஹிணீ ஸைந்யங்களையும் அநேக மஹாரதர்க



ளையும் நீயே ஜயித்தாயென்ற யசஸை நீயே அடை, நீ செய்ய வேண்டும் ஜயத்தை நான் முன்பே செய்துவிட்டேன், நீ நிமித்தமாத்திரமாகக் கடவாய்" என்று விச்வரூபத்தோடு பேசியபடி நான் ஓர் நிமித்தமாத்திரமாக இருந்தும், இவ்வரும் பெரும் சதகத்தின் கர்த்தாவென்ற யசஸை எனக்கு அளித்து, அப்பட்டத்திற்கு அர்ஹனென்றென்னை உலகம் மெச்சச் செய்கிறார். நிமித்தமாத்ரமான எனக்கு (மந்தனுக்கு) கவியசோலாபத்தை யளிக்கிறார். இந்த சதகம் ஆதிவேதாந்ததேசிகரொருவருக்குத்தான் சக்யம். அவரால் விளையாட்டுக்காக அப்பீடத்தில் எம்மாசார்யப்ராசார்யாசீர்வாதத்தை ஸத்யமாகச் செய்ய உட்கார்த்திவைக்கப்பட்ட பிள்ளை செய்ததென்று நினையாதே. மஹிஷியான உன்னைத் தாம் நேரில் பாட வெட்கப்பட்டு, என்னை வ்யாஜமாகக்கொண்டு, என் முகமாய்ப் பாடினர், மலையரசர்வீணை முதலிய வாத்யவாதனத்தில் ரஸிகர்; ஸங்கீதத்தில் நிபுணர். பனிமலைத் தேவர் கானரஸிகராய் கின்னரஸ்திரீகள் உச்சகானத்திற்கொத்து மூங்கில் குழல் வாத்யம் வாசிப்பதாகக் காளிதாஸர் வர்ணித்தார். 'ஸமயே' என்பதற்கு 'ஒன்றுமறியாத பாலனை நூறுபாட்டுக்கள் பாடச் செய்கிறேன்' என்று விளையாட்டுப் பந்தயம் போட்டுக் கொண்டு பாடிவைத்தார் என்றும் பொருள் கொள்ளலாம். (104)

अनवधिमधिकृत्य श्रीनिवासानुकम्पाम्
अवितथविषयत्वाद्विश्वमव्रीडयन्ती ।
विविधकुशलनीवी वेङ्कटेशप्रसूता
स्तुतिरियमनवद्या शोभते सत्त्वभाजाम् ॥ १०५ ॥

அநவதிமதிக்ருத்ய ஸ்ரீநிவாஸாநுகம்பாம்
அவிததவிஷயத்வாத் விச்வமவ்ரீடயந்தீ ।
ஸகலகுசலநீவீ வேங்கடேச ப்ரஸூதா
ஸ்துதிரியமநவத்யா சோபதே ஸத்த்வபாஜாம் ॥ (105)

(ப-ரை) अनवधिं - எல்லையற்ற, श्रीनिवासानुकम्पां - ஸ்ரீநிவாஸன் தயையை, अधिकृत्य - விஷயமாகக்கொண்டு (குறித்து), वेङ्कटेशप्रसूता - (வேங்கடேசனிடம் பிறந்ததும், வேங்கடேசன் பெற்றதும்), अवितथविषयत्वात् - சொன்ன விஷயங்கள் பொய்யல்லாமல் ஸத்யமானதால், विश्वं -

எல்லோர்க்கும் (ஒருவருக்கும்), ந த்ரபயதி - வெட்கமுண்டாக்காததும், விவித⁴குஶலநீவீ - ஸகலவிதமான க்ஷேமங்களுக்கும் மூலதனநிதியாயும், நிரவத்³யா - தோஷமற்றதுமான, இயம் - இந்த, ஸ்துதி: - துதி, ஸத்த்வபா⁴ஜாம் - ஸத்துவகுணமுடைய ஞானவான்களுக்கு, ஶோப⁴தே - நன்றென விளங்கும் (சோபிக்கும்).

" அளவிலடங்காத ஸ்ரீநிவாஸதயையைக் குறித்து வேங்கடேசன் பெற்றதும், துதிசெய்த பேச்சுக்கள் பொய்யல்லாததால் ஒருவரையும் வெட்கப்படச்செய்யாததும், ஸகல க்ஷேமங்களையுமளிக்கும் நிதியாயும், நிர்தோஷமாயுமுள்ள இந்தத் துதி ஸாத்விகர்களுக்கு அழகென சோபிக்கும். "

(தா-ம்) ஸாஹஸத்தில் தானிறங்கிப் பாடிய ஸ்துதியென்றார் 102-ல். ஸ்ரீநிவாஸன் பாடின கவியென்றார் முன்சுலோகத்தில். வேதாந்தாசார்யரும் கவிதார்க்கிகஸிம்ஹருமாயிருப்பவர் இப்படி முன்பின் விரோதம் பேசலாமோ? இரண்டிலொரு விஷயம் பொய்யாகாதோ? ஆகாது. இருவரும் உண்மையில் கர்த்தாக்களே. தேவன் ப்ரயோஜககர்த்தா, ஹேதுகர்த்தா; நான் ப்ரயோஜ்யகர்த்தா நிமித்தமாத்ரம்; அவர்தான் முக்ய கர்த்தா. இப்படி இரண்டு கர்த்தாக்களும் சேர்ந்து செய்வதுதானே வேதாந்தங்களின் தீர்மானம். இப்படி இரண்டு பேச்சும் பேசாவிடில், வேதாந்தாசார்யனென்பது அடியோடு பொய்யாகுமே. 'ஏஷ ஹ்யேவ ஸாது கர்ம காரயதி' 'இத்தேவனே நற்கர்மத்தைச் செய்விக்கிறான்' என்கிற ச்ருதிக்கு விஷயமான ஓர் விசேஷ அதிகாரியாகவும் கொள்ளலாம். எல்லோர்க்கும் பொதுவான பராயத்தகர்த்ருத்வத்தைக்கொண்டும் பேசலாம். எல்லாக் கர்த்ருத்வத்தையும் தேவனிடம் த்யாகம் செய்யும் அநுஸந்தானத்தைக்கொண்டும் பேசலாம். இருவரும் கர்த்தாக்களென்பது பொய்யாகாது. இந்தத் துதியின் ஆசிரியர் 'வேங்கடேசர்' என்று இருவர்க்கும் பொதுப்பெயரை அழகாகக் குறிக்கிறார். பெருமாளும் வேங்கடேசர், இவரும் வேங்கடேசர், வேங்கடேசநாமமும் அவரதே. அவர் தாஸரான எனக்கு அவர் பெயர் இரவல்தான். துதியும் பெயரிரவல் வ்யாபாரமென்று வேடிக்கையாக ஸூசனம். அவர் பெயர் எனக்கு இரவல்போல், அவர் காவ்யத்தின் பெயரும் (யஶஸ்ஸும்) எனக்கு இரவல். 'வேங்கடேசன் பெற்றது'. ப்ரஸூதா என்பதற்குப் 'பெற்றது' என்று பொருள். என்முகமாய் வேங்கடேசரால் வெளிப்படுத்தியது. அவசமாக வெளிப்பட்டது. வெறும் குழந்தைக்கு தாயை 'கர்த்ரீ-உண்டுபண்ணுபவள்' என்று சொல்வரோ; வேங்கடேசப் பெருமாள்தானே அக்குழந்தைக்கு கர்த்தா. உச்சாரணம் பண்ணின ச்ரமம்தானே எனக்கு. 'துதி' என்பதற்கு 'நன்றாய் உண்மையாயுள்ள குணங்களை உள்ளபடி வர்ணிப்பது' இலக்கணமென்று ஆழ்வான் ஸாதித்தார். 'குணியினிடமுள்ள குணத்தைப் பேசுவது' துதியென்பர். பொய்யாகத் துதித்தால், துதிக்கப்படுபவருக்கும் வெட்கமுண்டாகும், துதிசெய்பவருக்கும் வெட்கமுண்டாகும், கேட்பவருக்கும் வெட்கமுண்டாகும். இப்படி எல்லோரையும் பொய்ஸ்தோத்திரம் வெட்கப்படச்செய்யும். 'விச்வம்' என்பதற்கு 'எல்லோரையும்' என்று பொருள். இத்துதிவிஷயங்களுண்மையானதால் ஒருவரையும் வெட்கப்படுத்தவிடமில்லை. வேங்கடேசன் பெற்ற கன்யையான இந்த ஸ்துதியால் பெற்றோர் குலத்திற்கும் கீர்த்தியே பெருகும். இக்கன்யையையிட்டு ஒருவருக்கும் எக்காலத்திலும் வெட்கப்பட நேராது. பெற்ற பெண்ணிடத்தில்போல், தாம் பெற்ற இந்த ஸ்துதியில் தமக்கு அபிமானமென்பதையும், 'பெற்ற' என்பதால் ஸூசிக்கிறார். (104)



ஶதகமித³முதா³ரம் ஸம்யக³ப்⁴யஸ்யமாநாந்
வ்ருஷகி³ரிமதி⁴ருஹ்ய வ்யக்தமாலோகயந்தீ ।
அநிதரஶரணாநாமாதி⁴ராஜ்யே(அ)பி⁴ஷிஞ்சேத்
ஶமிதவிமதபக்ஷா ஶார்ங்க³த⁴ந்வாநுகம்பா ॥ ௧௦௫ ॥

சதகமிதமுதாரம் ஸம்யகப்யஸ்யமாநாங்
வ்ருஷகிரிமதிருஹ்ய வ்யக்தமாலோகயந்தீ ।
அநிதரசரணநா மாதிராஜ்யேZபிஷிஞ்சேத்
சமிதவிமதபக்ஷா சார்ங்கதந்வாநுகம்பா ॥ (105)

(ப-ரை) வ்ருஷகி³ரிமதி⁴ருஹ்ய-வேங்கடமலையிலேறி, உதா³ரம்-குணங்களால்பூர்ணமானதும், கோருவதையெல்லாம்வழங்குவதுமான, இத³ம் ஶதகம்-இந்த தயாசதகஸ்தோத்திரத்தை, ஸம்யக் - நன்றாக, அப்⁴யஸ்யமாநாந் - திரும்பவும் திரும்பவும்

அப்யஸிப்பவர்களை (படிப்பவரை), வ்ருக்ஷம் - நன்றாக, ஆலோக பந்தீ - பார்க்கிறவளாய், சார்ங்கதந்வா - சார்ங்கம் என்னும் வில்லேந்திய ஸ்ரீநிவாஸனுடைய தயை, ப்ரதிகவிஷ்டு வக்ஷா - விரோதிகக்ஷிகளையெல்லாம் சாந்தப்படுத்தி, அகிஞ்சன ஸார்வபௌமாநாம் - வேறு கதியற்ற பேதை (அகிஞ்சனர்) களுக்குரிய, ஆதிராஜ்யே - உன்னதராஜபதவியில், அபிஷிஞ்சதி - அபிஷேகம் செய்வள்.

" அபேக்ஷித்ததையெல்லாம் வள்ளலாய் வழங்கும் இந்த நூறு பாசுரமடங்கிய துதியை நன்றாய்ப் பாராயணமாகப் படிப்பவர்களை வேங்கடமலை மேலேறி நன்றாகப் பார்த்துக்கொண்டிருக்கும் ஸ்ரீநிவாஸனுடைய தயையானவள் விரோதக் கக்ஷிகளையெல்லாம் சமனம் செய்து (அடக்கி) வேறு கதியில்லாத அகிஞ்சனனுக்கு ஏற்ற அதிராஜபட்டத்தில் (அகிஞ்சனசக்ரவர்த்திப்பட்டத்தில்) அபிஷேகம் செய்வாள் ".

(தா-ம்) மலைப்பெருமாளுடைய தயையைத் துதிசெய்வதில் இது ஒருஸௌகர்யம். கீழேயுள்ள நாடுகளில் இத்துதியைப்படிப்பவர்களையெல்லாம் மேலேயிருந்து நன்றாகக் கவனித்துப்பார்க்க ஸௌகர்யமுளது. இந்த சதகம் உதாரம். காவ்யகுணங்களாலும், கம்பீரமான பொருள்களாலும் நிரம்பினது. கோறினதையெல்லாம் உதாரமாக வழங்கக் கூடியது. தயை எப்படி உதாரையோ, அப்படியே அவள் விஷயமான ஸ்தோத்ரமும் உதாரம். 'இந்தத் துதியை அப்யாஸம் பண்ணுகிறவர்கள்', அப்யாஸம் என்பது பலமுறை படிப்பதைச் சொல்லும். 'குணம்' என்பதற்கு 'குண்யதே' பலகால் சொல்லிச் சொல்லிப் புகழப்படுகிறது என்பது பொருள். ஸௌசீல்யகுணத்தின் விஷயத்தில் அப்படிப் பொருளுரைக்கப்பட்டது. தயாகுணத்திற்கும் அது ஏற்கும். தயாகுணத்திற்குப் பொருந்துவது தயையின் துதிக்கும் பொருந்தும். தயையைத் தவிர வேறு கதியில்லை என்றிருக்கும் அகிஞ்சனர்களுக்குச் சக்ரவர்த்தியாக (தாழ்ந்தவரிலும் கடையோனைத் தாழ்ந்தவனென்றும் உயர்த்தியுடைய ஸிம்ஹாஸனபதத்தில்) அபிஷேகம் செய்துவைப்பாள். கிங்கரத்வாதிராஜ்யமே நமக்கு நிகரற்ற ராஜபதம். அந்தப் பதத்தில் நமக்கு அபிஷேகம். பெருமாளை அதிபதியாக அடைந்து அநந்யாதிபதிகளாகிறோம். விமத



பக்ஷத்தையெல்லாம் தயை அடக்கிவிட்டுக் குழந்தைகளாகிய நமக்கு அபிஷேகம் செய்கிறாள். 'பாலம்' என்பதை இங்கேயும் நினைக்கவேண்டும். பாலப்பர்வத்தில் இத்துதியைப் பெரியோர்களிடம் ஸந்தை சொல்லி அப்யாஸம் செய்வர். 'விமதபக்ஷம்' என்பது 'தண்டிக்கவேணுமென்னும்' எதிர்கக்ஷி. மற்றக் குணங்கள் செய்யும் எதிர்வாதங்களைத்தக்கபடி ப்ரதிவதனம்செய்து சமனப்படுத்தி நம்முடைய விரோதிகளான பாபங்களைப்போக்கி,'சார்ங்கதந்வா' சார்ங்கமென்னும் வில்லேந்தினவன் நம்மை ஜயித்து வசப்படுத்தத் திருமலையில் வில்லுங்கையுமாய் நின்றுகொண்டு தயாகவசத்தைத் தரித்துக்கொண்டு ஸமயம் பார்த்துக்கொண்டிருக்கிறான் என்று 28-ம் ச்லோகத்தில் ஸாதித்தார். அங்கே 'சார்ங்கி' என்று பெருமாளைச் சார்ங்கத்தை ஏந்தினவராக வர்ணித்தார். இங்கே பெருமாளுக்கு நம்மை வசப்படுத்துவதாகிய ஜயம் ஸித்தித்ததால் பெருமாளைச் 'சார்ங்கதந்வா' என்று வர்ணிக்கிறார். பெருமாளுக்கு மனோரதம் ஸித்தித்து ஜயம் கிடைத்தது. ஆனாலிங்கே அபிஷேகம், துதியைப் படித்து ஆகிஞ்சந்யத்தில் ரஸமுடைய பேதைப்ரஜைகளுக்குத் தயாதேவியால் செய்விக்கப்படுகிறது. ஆகாசகங்கை முதலிய மலை அருவியின் தீர்த்தங்களைக்கொண்டு அபிஷேகம் செய்யவும் ஸௌகர்யம்; கீழேயிருப்பவர்கள் முடியில் உயரத்திலிருந்து கங்கையை வார்க்கலாம். திவ்யதம்பதிகளுக்கு அபிஷேகமில்லை; தயாதேவிக்கு அபிஷேகமில்லை; வேதாந்ததேசிகபதத்தில் ஏற்றிவைக்கப்பட்ட கவிக்கு அபிஷேகமில்லை; துதியைப் படிக்கும் அகிஞ்சனர்களுக்கு அபிஷேகம். மனப்பாடம் ஆவதற்கு முன்பே ஸந்தை சொல்லும்பொழுதே அபிஷேகமாய் விடும். 'அப்யாஸம்' என்பது இரண்டு மூன்று ஆவ்ருத்தி செய்யும் ஸந்தையையும் சொல்லும். (106)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௧0௭ ॥

விச்வாநுக்ரஹமாதரம் வ்யதிஷஜத் ஸ்வர்காபவர்காம் ஸுதா
ஸத்ரீசீமிதி வேங்கடேச்வரகவிர் பக்த்யா தயாமஸ்துத |
பத்யாநாமிஹ யத்விதேயபகவத்ஸங்கல்பகல்பத்ருமாத்
ஜஞ்ஜாமாருததூதசூதபத: ஸாம்பாதிகோZயம் க்ரம:॥ (107)

(ப-ரை) விச்வாநுக்ரஹமாதரம் - ஸகல அநுக்ரஹங்களையுமளிக்கும் தாயாயிருப்பவளும், வ்யதிஷஜத்ஸ்வர்காபவர்காம் - ஸ்வர்க்கமோக்ஷங்களைச் சேர்ப்பிப்பவளும், ஸுதாஸத்ரீசீம் - அம்ருதம்போன்றவளுமான, தயாம் - தயையை, வேங்கடேச்வரகவி: - வேங்கடேச்வரனென்னும் கவி, பக்த்யா - பக்தியினால், இதி - இப்படி, அஸ்தோத - துதிசெய்தார். உத - இங்கே, (இத்துதியில்) யஸ்யா: - எந்த தயாதேவிக்கு இட்டது சட்டமான, ஹ்ருஷீகேசஸங்கல்ப - ஸ்ரீநிவாஸன் ஸங்கல்பம் என்கிற, கல்பத்ருமாத் - கல்பகவ்ருக்ஷத்திலிருந்து, ஸம்வாதாராதயா நிபதத: - பெருங்காற்றினால் மாமரத்திலிருந்து (ஒரே க்ஷணத்தில் ஒரு நூற்றுக்கணக்காக) பழங்கள் உதிர்க்கப்படுவதுபோல, பத்யாநாம் - ச்லோகங்களுடைய, அயம் - இந்த, ஸம்வாதிக: - ஒரே கும்பலாய் புத்தியில் தோன்றிய, க்ரம: - ஓர் முறையானது ஏற்பட்டது.

"எல்லா அநுக்ரஹங்களையும் விச்வத்திற்கெல்லாம் அளிக்கும் தாயாயும், ஸ்வர்க்கமோக்ஷப் பயன்களைச் சேர்க்குமவளும், அம்ருதத்தைப்போல் இனியவளுமான தயாதேவியை வேங்கடேசுவரகவி பக்தியோடு இப்படித் துதித்தார். துதிக்கப்பட்ட அந்த தயாதேவிக்கு இட்டது சட்டமான பகவத்ஸங்கல்பமென்னும் கல்பவ்ருக்ஷத்திலிருந்து என்னுடைய புத்தியில் இந்நூறு பத்யங்களும் ஏககாலத்தில் பெருங்காற்றில் அசையும் மாமரத்திலிருந்து பழங்கள் விழுவதுபோல் இறங்கிவிட்டன. (தோன்றின) உதிர்ந்தன",

(தா-ம்) தயைவிஷயமான இந்த சதகம் உதாரமாகப் பலன்களை வழங்குமென்றார். எந்தப் பலமும் பகவத்ஸங்கல்பத்தால் தான் கிடைக்குமென்பர். எப்படி தயை வழங்கக்கூடும். பகவத் ஸங்கல்பம் கல்பகவ்ருக்ஷமென்பது உண்மையே. ஆனால், அந்த ஸங்கல்பம் தயைக்கு அதீனமானது. தயாதேவி ப்ரேரணம் செய்கிறபடி ஸங்கல்பம் வழங்குகிறது. ஏககாலத்தில் நூற்றுக்கணக்காகப் பலன்களைக் கையில் சேர்க்கும். இந்தத்துதியிலுள்ள பத்யங்கள் என் புத்தியில் ஏககாலத்தில் ஒரு நூற்றுக்கணக்காக இறங்கின. பகவத்ஸங்கல்பமென்னும் கல்பகவ்ருக்ஷத்திலிருந்து உதிர்ந்தன. இந்தப் பத்யங்கள் என் புத்தியில் தோன்றும்படி



அநுக்ரஹம் ஏற்பட்டதிலும் உயர் [illegible] ன்ன உளது? என் புத்தியால் அனந்த அர்த்தங்களை ஆலோசித்தறிந்து கவனம் செய்தாலல்லவோ ஒன்றுக்குப் பின்னொன்றாக ரசனை செய்யவேண்டும். தயை என்னும் ஓர் பெருங்காற்றடித்து பகவத் ஸங்கல்பமென்னும் கல்பவ்ருக்ஷத்திலிருந்து இந்த நூறு பத்யங்களையும் என் புத்திக்குள் தள்ளிவிட்டது. (உதிக்கச்செய்தது); அப்படி ஒரேகாலத்தில் தோன்றுகையிலும், இந்த வரிசைக்ரமப்படிக்குள்ள தொடர்ச்சியாகவே உதித்தது. 'வேதமென்னும்' கல்பவ்ருக்ஷத்திலிருந்து பாகவதமென்னும் ரஸப்பழம் விழுந்ததுபோல் என் காவிற்கு இந்நூறு ரஸப்பழங்களும் அனுகின. 'பக்தியோடே' என்பதால், இந்தப்பத்யங்களை உச்சரிப்பதில் பக்திமட்டும் என்னுடையது என்று ஸூசிக்கிறார். பாடும் கவியின் பக்தியென்னும் ரஸம் இங்கே அம்ருதத்ரவம். அடுத்த ச்லோகத்தில் மலையுச்சியிலிருந்து கீழே விழும் மலையருவியாகத் தயையை வர்ணிக்கிறார். இங்கே தயையே ஜஞ்ஜாமாருதமென்று வர்ணிக்கிறார்.

காமம் ஸந்து மித: கரம்பிதகுணாவத்யாநி பத்யாநி
ந: கஸ்யாஸ்மிந் சதகே ஸதம்புகதகே தோஷச்ருதிம்
க்ஷாம்யதி | நிஷ்ப்ரத்யூஹவ்ருஷாத்ரிநிர்ஜரஜரத்கா
ரச்சலேநோச்சலந் தீநாலம்பநதிவ்யதம்பதிதயாகல்லோல
கோலாஹல: || ௧0௮ ||

காமம் ஸந்து மித: கரம்பிதகுணாவத்யாநி பத்யாநி ந:
கஸ்யாஸ்மிந் சதகே ஸதம்புகதகே தோஷச்ருதிம் க்ஷாம்யதி |
நிஷ்ப்ரத்யூஹவ்ருஷாத்ரிநிர்ஜர ஜரத்காரச்சலேநோச்சலந்
தீநாலம்பநதிவ்யதம்பதிதயா கல்லோலகோலாஹல: || (108)

(ப-ரை) ந: - எங்களுடைய, பத்யாநி - ச்லோகங்கள், மித: கரம்பிதகுணாவத்யாநி - குணம் தோஷம் ஒன்றோடு ஒன்று கலந்தனவாக, காமம் ஸந்து - வேண்டியமட்டும் இருக்கட்டும். (என்ன குற்றம் இருந்தாலும்) நிஷ்ப்ரத்யூஹம் - தட்டுத் தடங்கலில்லாமல், வ்ருஷாத்ரி - வேங்கடமலையினுடைய, நிர்ஜர - அருவியின், ஜரத்காரச்சலேந - விழும் இரைச்சலென்னும் வேஷத்தை வைத்துக்கொண்டு, உச்சலந் - ஓடிவரும், தீநாலம்பந - அகிஞ்சனரான பேதைகளுக்குக் கதியான, திவ்ய

தம்பத்யோ: - திவ்யதம்பதிகளுடைய, தயாகல்லோலகோலாஹல: - தயையின் அலைகளின் கோலாஹலசப்தம், ஸதம்புகதகே - சுத்தஜலம்போன்ற ஸத்துக்களின் மனதை சோதகமான தேத்தாங்கொட்டையைப்போல் சுத்தம் செய்யும், அஸ்மிந் ஶதகே - இந்த சதகத்தில், (நூலில்), கஸ்ய - எவனுடைய, தோஷஶ்ருதிம் - குற்றப்பேச்சு காதில் விழுவதை, க்ஷாம்யதி - பொறுக்கும். யார் குற்றப் பேச்சைக் காதில்விழவொட்டும்.

"எங்களுடைய இந்தப் பிரபந்தங்கள் வேண்டிய மட்டும் குற்றம் கலந்தனவாகவேயிருந்தாலும் இருக்கட்டும். வேண்டியமட்டும் விமர்சகவித்வான்கள் பணிக்குச் சொல்லப் பார்க்கட்டும். ஸத்துக்கள் (மனமாகிய) ஜலத்திற்குத் தேத்தாங்கொட்டை (கதகம்) போன்ற இந்த சதகவிஷயத்தில் எவர் குற்றப் பணிப்பு சப்தத்தை, பேதையர்க்கு ஆச்ரயமான திவ்யதம்பதிகளுடைய தடுக்கமுடியாமல் அதிவேகமாக வேங்கடமலையிலிருந்து விழும் அருவிகளின் சாக்கைக்கொண்டு பேரிரைச்சலோடு ஓடிவரும் தயையென்னும் மலையருவிகளின் கோலாஹல இரைச்சல் காதில் விழ இடங்கொடுக்கும்"?

(தா-ம்) 105-ல் இந்தத் துதி குற்றமற்றதென்றார். நீர் பெற்ற துதி உமக்குக் குற்றமில்லை என்று தோன்றினாலும், பராமர்சிக்கும் வித்வான்கள் இதில் குற்றமும் குணமும் கலந்திருக்குமென்பரே. இப்படி ஆக்ஷேபம் வர, வேண்டிய மட்டும் குற்றஞ்சொல்லப்பார்க்கட்டும், குற்றங்களைப் பேசட்டும்; அவர்கள் குற்றப்பேச்சு ஒருவர் காதிலும் விழவொட்டாமல் திவ்யசம்பதியின் தயை மலைமேலிருந்து "சோ" என்று சப்தித்துக்கொண்டு குற்றம்பேசும் பண்டிதர் பேச்சை அமுக்கிவிடும். தயை அருவி மலையிலிருந்து விழும் கோலாஹலஇரைச்சலில் இத்தக்குற்றச்சொல் அமுங்கிப்போகும். தயை விஷயமான துதியின்பேரில் குற்றச்சொல்லைத் திவ்யதம்பதிகளும் பொறுக்கமாட்டார்கள், எல்லாக் கொடிய குற்றங்களையும் தயாதேவி பொறுத்துவிடுவாள். பொறுப்பிப்பாள். இந்தத் தோத்திரத்தின் விஷயத்தில் குற்றஞ்சொல்லுவதை மட்டும் பொறுக்கமாட்டாளென்பது வேடிக்கை. க்ஷமையே வடிவான தயையும் இத்துதியில் பிறர் குற்றச்



சொல்லை க்ஷமிக்கமாட்டாள். ஆனால், தயையானபடியால், குற்றஞ்சொல்பவரை ஹிம்ஸிக்கமாட்டாள், தண்டிக்கமாட்டாள். அவர்கள் குற்றப்பேச்சை இன்னம் அதிகமாக இரைச்சல் யோடுவதால் காதில் விழாமல் அமுக்கிவிடுவாள். மலையருவிகள் மேலேயிருந்து கீழேவிழுகின்றனஎன்ற சாக்கைவைத்துக்கொண்டு பேரிரைச்சலாகக் கோலாஹலம் செய்து குற்றசப்தத்தைக் காதில் விழாமல் மறையச் செய்வாள். குற்றஞ்சொல்லுகிற வித்வானும் குணங்களும் குற்றங்களும் கலந்திருக்கின்றனஎன்று தூஷிப்பரே ஒழிய, குணமேயில்லை என்று தூஷிக்கத் துணியமாட்டார். 'பத்யங்களை'ப் பழித்தாலும் என்பதற்கு 'ஒவ்வொரு பத்யமாக எல்லாப் பத்யங்களையும் குற்றமுடையதாகத் தூஷித்தாலும் என்'றும் பொருள் கொள்ளலாம். ஸ்ரீபாகவதத்தில் 'ப்ரதிச்லோகமும் அபத்தமாயிருந்தாலும்' என்பதுபோல. இந்த சதகம் 'ஸதம்புகதகம்' என்பதில் மிக ரஸங்கள் உள. அழுக்குக் கலந்த ஜலத்தில் பண்ணை மட்டும் பிரித்து விட்டு சுத்த ஜலத்தைத் தனிப்படுத்தும் சக்தியுடையது கதகம் என்னும் தேத்தாங்கொட்டை. ஸத் என்பவர் குணதோஷங்களைப் பகுத்தறியும் வித்வான். நல்லது பொல்லாதகைத் தெளியப் பிரிக்கக்கூடியவர்கள் ஸத்துக்கள். அவர்களுடைய தெளிவான புத்தி (மனது) ஜலமாக வர்ணிக்கப்படுகிறது. ராமாயணத்தில் வால்மீகி ஆச்ரமத்தின் ஓரத்திலோடும் தமஸாநதியின் சுத்தமான தீர்த்தத்தைவர்ணிக்கையில் 'ஸத்தான மனுஷ்யர்களுடைய சுத்த மனதைப்போல அழகாயும், ப்ரஸந்நமான அம்புவாயும் (தெளிந்த சுத்தஜலமாயும்) இருப்பதாயும்' வர்ணித்தார். அதைத் திருவுள்ளத்திற்கொண்டு, இங்கே வித்வான்களின் மனதை அம்புவாக (ஜலமாக) நிரூபிக்கிறார். குணதோஷங்களைப் பிரிக்கும் விஷயத்தில் அவர்களுக்குப் போதுமான புத்தித் தெளிவு இல்லாமலிருந்தாலும், அவர்கள் புத்தியைத் தெளியப்படுத்தும் இந்த சதகமாகிய கதகம். தோஷலேசமில்லாமல் 'சுத்தமான பத்யங்கள்'. இப்படித்தான், இந்த க்கவனம் இருக்கவேண்டுமென்பதை அவர்களுக்குச் சிக்ஷித்துக்கொடுக்கும் இதிலிருந்து அந்த சோதகர்கள் மாசற்ற காவ்யரீதியைக் கற்றுக்கொள்ளவேணும். அவர்கள் புத்தியிலுள்ள காலுஷ்யத்தை (அறியாமையை)ப் போக்கும் அவர்கள் மனதாகிய நீரைச் சுத்தப்படுத்தும். சோதகர் மனதைத் தெளியச் செய்யும். இன்னமிரண்டுவிதமான பொ

சொல்லே க்ஷமிக்கமாட்டாள். ஆனால், தயையானபடியால், குற்றஞ்சொல்பவரை ஹிம்ஸிக்கமாட்டாள், தண்டிக்கமாட்டாள். அவர்கள் குற்றப்பேச்சை இன்னம் அதிகமாக இரைச்சலோடு வதால் காதில் விழாமல் அமுக்கிவிடுவாள். மலையருவிகள் மேலேயிருந்து கீழேவிழுகின்றனஎன்ற சாக்கைவைத்துக்கொண்டு பேரிரைச்சலாகக் கோலாஹலம் செய்து குற்றசப்தத்தைக் காதில் விழாமல் மறையச் செய்வாள். குற்றஞ்சொல்லுகிற வித்வானும் குணங்களும் குற்றங்களும் கலந்திருக்கின்றனஎன்று தூஷிப்பரே ஒழிய, குணமேயில்லை என்று தூஷிக்கத் துணியமாட்டார். ‘பத்யங்களைப் பழித்தாலும் என்பதற்கு ‘ஒவ்வொரு பத்யமாக எல்லாப் பத்யங்களையும் குற்றமுடையதாகத் தூஷித்தாலும் என்றும் பொருள் கொள்ளலாம். ஸ்ரீபாகவதத்தில் ‘ப்ரதிச்லோகமும் அபத்தமாயிருந்தாலும்’ என்பதுபோல. இந்த சதகம் ‘ஸதம்புகதகம்’ என்பதில் மிக ரஸங்கள் உள. அழுக்குக் கலந்த ஜலத்தில் மண்ணை மட்டும் பிரித்து விட்டு சுத்த ஜலத்தைத் தனிப்படுத்தும் சக்தியுடையது கதகம் என்னும் தேத்தாங்கொட்டை. ஸத் என்பவர் குணதோஷங்களைப் பகுத்தறியும் வித்வான். நல்லது பொல்லாததைத் தெளியப் பிரிக்கக்கூடியவர்கள் ஸத்துக்கள். அவர்களுடைய தெளிவான புத்தி (மனது) ஜலமாக வர்ணிக்கப்படுகிறது. ராமாயணத்தில் வால்மீகி ஆச்ரமத்தின் ஓரத்திலோடும் தமஸாநதியின் சுத்தமான தீர்த்தத்தை வர்ணிக்கையில் ‘ஸத்தான மனுஷ்யர்களுடைய சுத்த மனதைப்போல அழகாயும், ப்ரஸந்நமான அம்புவாயும் (தெளிந்த சுத்தஜலமாயும்) இருப்பதாயும்’ வர்ணித்தார். அதைத் திருவுள்ளத்திற்கொண்டு, இங்கே வித்வான்களின் மனதை அம்புவாக (ஜலமாக) நிரூபிக்கிறார். குணதோஷங்களைப் பிரிக்கும் விஷயத்தில் அவர்களுக்குப் போதுமான புத்தித் தெளிவு இல்லாமலிருந்தாலும், அவர்கள் புத்தியைத் தெளியப்படுத்தும் இந்த சதகமாகிய கதகம். தோஷலேசமில்லாமல் ‘சுத்தமான பத்யங்கள்’. இப்படித்தான், இந்த க்கவனம் இருக்கவேண்டுமென்பதை அவர்களுக்குச் சிக்ஷித்துக்கொடுக்கும் இதிலிருந்து அந்த சோதகர்கள் மாசற்ற காவ்யரீதியைக் கற்றுக்கொள்ளவேணும். அவர்கள் புத்தியிலுள்ள காலுஷ்யத்தை (அறியாமையை)ப் போக்கும் அவர்கள் மனதாகிய நீரைச் சுத்தப்படுத்தும். சோதகர் மனதைத் தெளியச் செய்யும். இன்னமிரண்டுவிதமான பொ



ருள்களுமுண்டு .ஸத்துக்களாயிருப்பவர் மனதில் நாம் முன்செய்த கொடுவினைகளையெல்லாம் ஸ்ரீநிவாஸனுடைய தயை க்ஷமிக்குமோ என்று சங்கை என்னும் காலுஷ்யமிருக்கலாம். ஸத்துக்களின் மனமென்னும் நீரிலுள்ள ஸந்தேஹமென்னும் காலுஷ்யத்தை எல்லாம் தயையின் எல்லையற்ற ப்ரபாவத்தை விளக்கும் இந்தத்தோத்திரம் தேத்தாங்கொட்டையைப்போல போக்கிச் சுத்தம் செய்து நிஸ்ஸம்சயமாக்கும். இது ஒரு பொருள். ‘ஸதம்பு’ என்பதற்கு நீர் இருப்பது நீருள்ளது என்று பொருள்கொள்ளலாம். வித்வான்கள் மனதில் ‘ரஸம்’ என்னும் ஜலம் கொஞ்சமேனுமிருந்தால். அடியோடு உலர்ந்த பங்கமாக (சேராக) இருந்தால், தேத்தாங்கொட்டை என்ன செய்யும்? ஜலமும் மண்ணும் கலந்திருந்தால் மண்ணைக் கீழே தள்ளி ஜலத்தைச் சுத்தமாகச் செய்யும். கொஞ்சமேனும் நீர் இல்லாமலிருந்தால் இந்தக்காவ்யமவர்களுக்கு எப்படி ஆராதிக்கச்செய்யும். ‘பங்கத்தைக் கதகம் எப்படித் தெளிவுபடுத்தும், ஸந்தோஷப்படுத்தும்’ என்றார் வாமனர். ரஸமுடைய ஸஹ்ருதயர்களைத்தான் காவ்யம் ரஞ்ஜிப்பிக்கும். ‘ந:’ என்று மூன்று கர்த்தாக்களையும் கூட்டிக்கொண்டார். பெருமாள் வேங்கடேசர், பெருமாள் ஸங்கல்பவ்ருக்ஷம், கவி வேங்கடேசர் ஆகிய மூவரையும் கர்த்தாக்களாகச் சேர்த்துக்கொண்டு ‘எங்கள் சதகம்’ என்றார். இந்தத் தோத்திரமும் தயாகல்லோலகோலாஹலமாகும். தயையின் அலைகளின் கோலாஹலசப்தமாகும். ‘ஹயவதனஹேஷாஹலஹலம்’ ஸ்வாமியின் கவிதைக்கு மூலம் மூலகாரணத்திலுள்ள ஹலஹலப்பதம் க்ரியமாணஸ்தோத்திரத்தின் முடிவில் ‘கோலாஹலம்’ என்று கொஞ்சம் ஸாம்யத்தோடு அமைந்தது.

𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌾𑌯 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑌣𑌶𑌾𑌲𑌿𑌨𑍇 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑌾𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌗𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃 ॥

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலிநே ।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்தகுரவே நம: ॥

𑌦𑌯𑌾𑌶𑌤𑌕𑌂 𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑍍 ।

தயாசதகம் முற்றிற்று.

வஸுதாத்மந:- பூமிஸ்வரூபமான (பூமிதேவியான) பூமி வடிவுடைய உன்னுடைய. 'ஸாக்ஷாத் க்ஷமாம்' என்று முதல் சுலோகத்திலேயே இதை ஸாதித்தார். 'வல்மீகம்' புற்று. அதற்கு 'வஸுதாச்ரோத்ரம்' என்று பெயர். வல்மீகத்தில் பிறந்தவர், பூமியின் செவியில் பிறந்தவர். 'வஸுதாச்ரோத்ரம்' என்ற பர்யாயபதத்தைப் புத்திக்குக் கொண்டுவருவதற்காக 'வஸுதா' சப்தத்தைப் பிரயோகித்தது.

தே-உன்னுடைய, ச்ரவணத:- திருச்செவியிலிருந்து. ஜன்ஹுமஹர்ஷியின் ச்ரவணத்திலிருந்து கங்கை அவதரித்தாள். அதுபோல உன்னுடைய ச்ரவணத்திலிருந்து ராமாயணகங்காப்ரவாஹஹேதுவான வால்மீகிமுனி பிறந்தார்.

வல்மீகத:— கரையான் புற்றிலிருந்து.

ஜாத:— பிறந்த. (ஜாதோ ஸர்வ) பிறவியாலேயே ஆனார். பிறந்ததும் ஆனார். ஜாத: கவிஸார்வபௌம: கவீச்வரராகவே பிறந்தார். 'ஸதாக்ஷிண்ய ஸம்பந்ந: ப்ரஸூத:' என்ற இடத்தில்போல பிறவிக் கவீச்வரர். உன்னிடத்திலிருந்துபிறந்ததே அவருடைய நிரதிசயமான கவிதைக்கு மூலம்.

ஸ முநி:— அந்த முனி. முனீச்வரர் கவீச்வரரானார். 'முனி' என்பது வாய்திறவாத மௌனியைச் சொல்லும். வாய் திறவாதவரும் வாசஸ்பதியாகப் பேசுவர். 'மூகையான் பேசலுற்றேன்'. 'மூகம் கரோதி வாசாலம்'. 'ஸகலவரதம் முநிவரணீதம்'. ஸ்ரீஹஸ்திகிரிமஹதே ஸர்வமுநிகந்யகே. வராஸரம் முநிவரம்'.

கவிஸார்வபௌம:— கவிச்சக்ரவர்த்தியாய், கவீச்வரராய். முநி என்பவர் யோகி. யோகத்தில் 7-பூமிகள், மேல் மேல் உப்பரிகைகள். மேல்மேல் ஏறவேண்டும் (ஆரோஹம்). 7-பூமிகளையும் ஏறுவர். 7- பூமிகளேறின யோகத்தை ஸார்வபௌமமென்பர். யோகிஸார்வபௌமர் கவிஸார்வமௌமரானார். யோகத்தில் 7-பூமிகள்போல், ராமாயணம் ஸப்தகாண்டம். ராமாயணத்தைப்போல, திவ்யதம்பதிகளிடத்தில் மனம் லயிக்க வேறு ஸாதனமில்லை. ராவணஜயம் மனோஜயமாகும். ராவணலயம், மனோலயம். அது யோககாஷ்டை.

ஸமர்த்தா - ஆனார்.

வாணி— வாக்கையளிக்கும் தேவியே! உன் புத்திரரான வால்மீகிக்கு நீதான் வாக்களித்தாய். ஆகையால்தான் அவருக்கும் கவிதாமூலமான உன்னை பிக்ஷை கேட்கிறேன். 'ஸாரம் கவீநாம் ஜூடாவுச்சிஷ்டம்' என்பதற்கும் மூலாதாரம் நீ.

(தே) வக்த்ராரவிந்தமகரந்தநிபா:— உன் திருமுகக்கமலத்திலிருந்து பெருகும் தேனுக்கு ஒப்பான (உன் ப்ரபந்தங்கள்). ஸாமான்யமான தாமரையிலிருந்து பெருகும் தேனுக்கு ஒப்பிட முடியாது. உன் திருவாயாகிய தாமரையிலிருந்து பெருகும் தேனுக்குத்தான் ஒப்பிடலாம். உன் ப்ரபந்தங்களாகிய தேனுக்கு உனக்குப் பாஹ்யமான உபமானமொன்றும் ஒப்பாது. கண்ணன் பாடிய கீதையை 'யா: ஸ்வயம் பத்மநாபஸ்ய முகபத்மாத் விநிஸ்ருதா:' என்று வர்ணிப்பர். 'வால்மீகேர்வதநாரவிந்தகலிதம் ராமாயணாக்யம் மது' என்று தித்திப்பதற்கும் நீதான் மூலமென்பதை ஸூசிக்கிறார்.

(தே) ப்ரபந்தா:— உன்னுடைய தேன் ப்ரபந்தங்கள். ப்ரபந்தமென்பதற்குப் பரம்பரை விஸ்தாரம் என்றும் பொருள். த்வநிபரம்பரை போய்க்கொண்டிருக்கும், கட்டிலடங்காது. திருநாமம் மட்டும் கட்டுப்பட்டது என்ற பொருளைக் கொடுக்கும், பொருள் விஸ்தாரம் கட்டிலடங்காது. பொருள்பரம்பரை எல்லையில்லாமல் மேல்மேலே போய்க்கொண்டிருக்கும். 'ஜஹாநாம் ப்ரபந்தாநாம்', 'க்ரியாப்ரபந்தாதயமத்வராணாமஜஸ்ரமாஹூதஸஹஸ்ரநேத்ர:'.

கே ப்ரபந்தா:- இப்பிரபந்தங்கள். இந்த என்று சொல்லலாமேயொழிய, இப்படிக்கொத்தது என்று வரையறுத்துப் பேச முடியாது. இதோ என் மனதுக்கும், காதுக்கும், நாக்குக்கும் சுவைக்கிறதே அந்தப் பிரபந்தங்கள். 'க்ருஷ்ணேத்யக்ஷரயோரயம் மதுரிமா' என்று ஜகந்நாதபண்டிதர். 'க்ருஷ்ண' என்ற இரண்டு அக்ஷரங்கள் தன் மனதிற்குச் சுவைத்த இனிப்பை 'இவ்வினிப்பு' என்று பேசியதுபோல.

யத் ஸ்வதந்தே- தித்திப்பது என்னும் ஊடம் இது, தித்திப்பது.

கிமத்புதம்- என்ன ஆச்சர்யம். இது ஓர் ஆச்சர்யமா? கைமுத்தியத்தால் கிடைப்பது ஆச்சர்யமாகுமோ? 'அத்புதம்'



என்பதை அத்புதம் ஸ்வதந்தே என்று ஒட்டிக்கொள்ளவேண்டும். இங்கே இரண்டு கைமுத்தியங்கள்— 1 உன்னிடம் பிறந்தவர் லோகோத்தரகவியாகையால் உன் காவ்யங்கள் லோகோத்தர மதுரமென்பதற்கு என்ன தடை? 2 உன்காதில் பிறந்தவர்வாக்கு அத்தனை இனிமையாகையில் உன் திருவாயிலிருந்து வரும் வாக்குகளின் இனிப்புக்குக் கேட்பானேன்?

வால்மீகி விஷயமான இந்த சுலோகத்தை 7-வது சுலோகமாக வைக்கப்பட்டது. உன் 'ச்ரவணத்திலிருந்து' என்பதற்கு எதிர்த்தட்டு உன் 'வக்த்ராரவிந்தத்திலிருந்து' என்பது. (7)

போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே
பக்திம் நிஜாம் ப்ரணயபாவநயா க்ருணந்த: ।
உச்சாவசைர் விரஹஸங்கமஜை ருதந்தை:
ச்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ்த்வதீயா: ॥ ॥ ८ ॥

போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே
பக்திம் நிஜாம் ப்ரணயபாவநயா க்ருணந்த: 1
உச்சாவசைர் விரஹஸங்கமஜை ருதந்தை:
ச்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ்த்வதீயா: ll (8)

(ப-ரை) கோதே - கோதாய்! தவ - உன்னுடைய, ப்ரியதமம் - அத்யந்த ப்ரியனை பர்த்தாவை, பவதீவ - உன்னைப் போலவே, போக்தும் - அநுபவிப்பதற்காக, நிஜாம் - தங்களுடைய, (ஸொந்தமான), பக்திம் - பக்தியை, ப்ரணயபாவநயா - ப்ரணயமார்க்கமாக, (நாயகீபாவமாக), க்ருணந்த: - பேசிக்கொண்டு, த்வதீயா: - உன்னுடைய, குரவ: - பெற்றோர்கள், உச்சாவசை:- மிகவும் அதிக்ரமித்த, விரஹஸங்கமஜை:- பிரிவு கூடல்களால் ஏற்படும், உதந்தை: - வ்ருத்தாந்தங்களால், ஹ்ருதயம் - தங்கள் மனதை, ச்ருங்காரயந்தி - ச்ருங்கார பாவமுடையதாக ஆக்கிக்கொள்ளுகிறார்கள்.

கோதாதேவியே! உன் குருக்கள் (பெரியோர்கள், ஆழ்வார்கள், உன் பிதா விஷ்ணுசித்தர்) உன்னைப் போலவே உன் ப்ரியதமரான பெருமாளை அநுபவிக்க ஆசைகொண்டு, தங்கள் பக்தியை ராகம், ஸ்நேஹம், என்னும் காமபாவத்தினால் பேசிக்கொண்டு, கீழும் மேலுமான பற்பல விரஹச்ருங்கார ஸம்ச்லேஷச்ருங்கார வ்ருத்தாந்தங்களால் தங்கள் மனதை ச்ருங்கார பாவத்தால் நிரப்புகிறார்கள்.

*அவதாரிகை:—* (1) வால்மீகி புத்தேறின தபஸ்வி. காமங்களெல்லாம் வற்றி உலர்ந்துபோன நெஞ்சுடைய விரக்தமுனி. அத்புதமான விப்ரலம்பக ச்ருங்கார, ஸம்ச்லேஷ ச்ருங்காரரஸங்களை எப்படி நெஞ்சில் வாங்கி ப்ரத்யக்ஷம்போல் வர்ணித்தார் ?

(2) நீர் சுஷ்கசுஷ்கமான விரக்தராயிற்றே, 'தருணீகுணபம்' என்று பேசுகிறவராயிற்றே. எனக்கும் என் நாயகனுக்கும் உள்ள ப்ரணயரஸங்களை எப்படி வர்ணிப்பீர் ?

(3) என் புத்திரரான ஆதிகவி வால்மீகியின் மதுரவாக்கைப் புகழ்ந்தீர். என் பெரியோரான அபிநவ தசாவதாரமான ஆழ்வார்கள் வாக்கின் இனிப்பெப்படி? என்னைப்பெற்ற என் தகப்பனார் வாக்கெப்படி ? என் நாயகனுக்கும் எனக்குமுள்ள ப்ரணயரஸத்தையும், எங்கள் திருக்கல்யாணத்தையும் வர்ணிக்கப்போகிறீரே. ஜாமாதாவான என் நாயகனுடைய மாதுர்யம் எப்படி. இதற்கெல்லாம் பதில்— வால்மீகி நெஞ்சம் அத்யந்த விரக்தமும், சுஷ்கமுமானதுதான். அவரென்ன பண்ணுவார். வர்ணிக்கப்படும் ரகுவரனிடத்தில் பக்தி அவரைத் தம்பதிகளுக்குள்ள ச்ருங்காரபாவத்தை வர்ணிக்கச்செய்கிறது. "பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்று தன்னைப் பெண்ணுடையுடுத்தச் செய்யும் ரூபாதிகளில் ஸ்வாநுபவத்தாலே அவர் பேசுகிறார். நான் என்ன விரக்தனானாலென்ன? பரமாத்மாவான உன் நாயகனிடம் ரக்தி (ரதி) யுடையவனே. சாஸ்த்ரீயசுத்தநிருபாதிகநிரதிசய ரஸமான உன் நாயகன் விஷயத்தில விரக்தி கூடுமோ ? 'அத்யர்த்தம் ப்ரிய:' 'ப்ரியதம ஏவ வரணீயோ பவதி' என்றபடி தனக்கு ப்ரியதமமாக அவனைப் பஜித்து, அவனுக்குப் பிரியதமமானால்தானே ஆத்மா பிழைக்கலாம். உன்பெரியோர்களான மயர்வறமதிநல மருளப்பெற்றவரும் பெண்ணுடை யுடுத்திக்கொள்ளச் செய்யும் மாப்பிள்ளை யம்மா. மற்ற ஆழ்வார்கள் போகட்டும். உன்னைப் பெற்ற ஆழ்வார் பெரிய ஆழ்வாரானாரேயம்மா. ரூபவதியான பார்யை அநேக ஸபத்நர்கள் (விரோதிகள்) ஏற்படுவதற்குக் காரணமாவாரென்பர். 'கந்யா வரயதே ரூபம்'. ஸர்வாதிசாயியான லாவண்யத்தையுடைய அரங்கனைத்தான் நீ தேடினாய். நீ ஈடுபடும் உன் நாயகன் அழகே புமான்களுடைய த்ருஷ்டிசித்தங்களை அபஹரித்து உனக்கு ஸபத்னீக்களாக்குகிறது.

|| ஸ்ரீ: ||

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ||

# ஓர் விண்ணப்பம்.

காஞ்சி ஸ்ரீ அண்ணங்கராசார்யர் அயத்தின் முதல்பத விஷயமாக திவ்யார்த்த தீபிகையில் வெளியிட்டிருப்பதைப் பார்த்தோம். இவர் 1929-ல் ஸ்ரீவாதிபீகராஹஸ்ராவதாரத்தில் ஆச்சான்பிள்ளையின் வாக்யத்தை அறியாமலே ஸ்ரீதேசிகன் 'வரணாவிதி நிதேசம:' என்று தொடங்கி நாலு காரிகைகளை எழுதிவைத்ததாகவும், ஆகவே 'விசேஷவ' என்கிற சப்தவிஷயத்திலே வைதிகஸார்வபௌமர் தேசிகனுக்கு ஸாக்ஷாத்ஸம்வாதம் பண்ணினர் (19) என்றும் எழுதினர். இப்படி இரண்டு விஷயத்தில் தேசிகனுக்கு ஹ்ருதத்தைச் சொல்லி, பிறகு 1934-ல் இவர் ரக்ஷாவிசேஷநஸாவஷ்டகாரிகையில் ஸாஹஸ்ரகத்கதிவஸநமான தேசிகோக்திகள் அநேகங்களிருப்பனவாகவும், அதற்கு முன் சொல்லிய தேசிககாரிகைகளே ஸாமீப்யாகந்யாயேந உதாரணம் என்றும் சொல்லி, 'ஸ்ரீநாராயணவரணாந' என்கிற ஆச்சான்பிள்ளையின் ஸ்வாதிநஸரீரத்தை அறியாமல் தேசிகன் தூஷித்ததாக பாதுகா ஸஹஸ்ராவதாரதத்துவத்தில்போல சொல்லிவிட்டு, விசேஷவஸப்தவிஷயத்தில் விசாரம் செய்து முடிவில் 15-வது பக்கத்தில் "வைதிகஸார்வபௌமர் தூஷித்த விஷயம் வேறு, தேசிகன் ஸச்சரித்ரரக்ஷையில் அருளிச்செய்தது வேறு, ஆக தேசிகனை அவர் தூஷித்தபடியல்ல" என்றும், தேசிகனுடைய ஹ்ருதயம் ஸஜாதீயமானதே என்றும் அறிவித்தார். இதனால் வைதிகஸார்வபௌமர் தேசிகனுக்குஸம்வாதனை பண்ணினதாகக்கொண்டு இவர் கட்டின கதைகளெல்லாம் தன்னுடைய ஹ்ருதவிருத்தமென்றும், தேசிகனுக்குப் பிரமமில்லை

என்றும் அறுதியிட்டார். ஆக 'ஸ்ரீநாராயணசரணௌ' என்கிற ஆவாபநஶரீரத்தை தேசிகன் அறியவில்லை என்பது ஒன்று மாத்திரம் நின்றது.

அதற்கு நாம் வசநக்ருத்யவிமர்சம் என்று ஒரு க்ரந்தம் எழுதி ஸ்ரீநாராயணசரணௌ என்று ஆச்சான்பிள்ளை ஆபாதனம் செய்யவில்லை என்றும், ஸ்ரீமந்நாராயணசரணௌ என்றே அவர் ஆவாபநம் செய்திருக்கிறார் என்றும், ஆக தேசிகன் தூஷித்ததெல்லாம் ஸங்கதமென்றும் நிரூபித்து, ஆச்சான்பிள்ளை பற்றின வழி ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் முதலானோர்க்கு ஸம்மதமல்ல என்பதையும் காண்பித்தோம். பிறகு இவர் ஸதாசாரப்ரஸக்திரக்ஷையில் முன் சொல்லிய நான்கு காரிகைகளும் தேசிகனால் இயற்றப்பட்டவையல்ல என்றும், பூர்வபக்ஷங்களென்றும் ஓர் புதிய கல்பனை செய்து, இதனால் பூர்வதூஷணம் யாதொன்றும் ஸித்தியாததையும், ஸ்ரீநாராயணசரணௌ என்பதை ஸ்தாபிக்கமுடியாது என்பதையும் பராமர்சித்து, 'ஸ்ரீயோநாராயணஸ்ய சரணௌ'என்றிப்படி ஏதோ ஒருவிதம் ஆச்சான்பிள்ளைக்கு அபிமதமாயிருக்கவேண்டும் என்று ஊஹித்துவிட்டு, எவ்வளவு சொன்னாலும் 'இப்பதத்தில் த்விவசனம்........தள்ளுகிறது' என்று சொன்ன ஆச்சான்பிள்ளைக்கு ஸ்ரீமந்நாராயணசரணௌ என்றே ஆவாபநஶரீரம் கல்பிதமென்று நாம் வசநக்ருத்ய விமர்சத்தில் சொன்னதை அழிக்கமுடியாதென்று திடமாக நினைத்து, அதில் ஓர் முக்கிய குறிப்பையும் வெளியிட்டார். அதில் தான் ஏதோ இதுவரையில் ஆசார்யர்களின் உபதேசக்ரமத்தை யடியொற்றி 'ஸ்ரீநாராயணசரணௌ' என்று சொல்லிவந்ததாயும், இனி "ஸ்ரீமந்நாராயணசரணௌ" என்றே அவருக்கு அபிமதமென்றேற்படுவதை அநுஸரித்து, ஹ்ருஷ்டஜெஜ்ஜூரவஹாஸ்யம் என்பதை மட்டும் தூஷிக்கப்போவதாகவும் அறிவித்தார். இவ்வளவால் என்ன முடிந்தது? வைதிகஸார்வபௌமர் தேசிகனைத்



தூஷித்தார் என்பதும், ஸச்சரித்ரரக்ஷையில் அருளிச்செய்தது தப்பென்பதும் எப்படிப் பிசகோ, அப்படியே ஆச்சான்பிள்ளையின் ஆவாபநம் தேசிகனுக்குத் தெரியவில்லை என்றும், அவருக்குப் பிரமமென்றும் முன் இவர் எழுதினதும் பிசகு என்று இவர் வாயைக்கொண்டே முடிந்தது.

பிறகு ஸதாசாரப்ரஸக்திரக்ஷாவிஷயங்களை மறுபடியும் விசேஷஹ்ருதயத்தில் நாம் நிரஸித்துவிடவே, திவ்யார்த்ததீபிகையில் முன் குறித்த முக்கிய குறிப்புவிஷயத்தை மட்டும் விவரித்துவிட்டு, நாலு காரிகைகளில் காரிகாஹாரங்களுக்கு தோஷம் சொல்ல விறகிராமற்போனதால், 'ஹ்ருஷ்டஜெஜ்ஜூரவஹாஸ்ய'மென்கிற மூன்றும் காரிகைகளை தூஷிக்க முயன்றிருக்கிறார். உண்மையில் தத்த்வபோதிநீ என்கிற அத்புதமான கிரந்தத்தையும் நம்முடைய வசநக்ருத்யவிமர்சத்தையுமிவர் ஊன்றிப் பார்த்திருந்தால் இந்த க்ரந்தம் எழுதி வெளியிட ந்யாயமிராது. ஸ்ரீமந்நாராயணசரணௌ என்கிற ப்ரயோகம் ஸாயம்வாகில் 'ஹ்ருஷ்டஜெஜ்ஜூரவஹாஸ்ய'மென்கிற ப்ரஸங்கம் மிகவும் அதிகம் என்பதே இவருடைய தூஷணஸாரம். பராமர்சித்துப் பார்த்தால் இது அதிகமே அன்றென்பது நன்கு விளங்கும். இப்படி எல்லாவிதங்களிலும் தேசிகன் காரிகை நிர்தோஷமாய்விடவே, ஸாராஸ்வாதிநியையாவது தூஷித்துத் திருப்தி அடையலாமென்று அதில் ப்ரச்நங்களைக் கிளப்பியிருக்கிறார். 'ஸாராஸ்வாதிநியைப் பற்றி பிறகு விசாரிப்போம். ஸ்ரீதேசிகஸ்ரீஸூக்திதூஷணஸம்ரக்ஷணம் ஸஹ்ருந் தானே' என்று கேட்டால் இவர் இசைந்தே தீரவேண்டும். ஆக இவருக்கு இனி எழுதவேண்டியது அனாவச்யகம். ஆனால் இவர் தன்னால் வாதிக்க முடியவில்லை என்று ஆங்காங்கு அன்யர்களை வேண்டிக் கொள்ளுவது தெரியவருகிறது. அதையும் யோஜித்து ஸ்ரீமந்நாராயணசரணௌ என்கிற ப்ரயோகம் வராது என்று வெகுநாள் கலங்கியிருந்து இப்பொழுது தெளிந்ததாக

இவர் எழுதுவதாலும், இவர் யார் மூலமாக எப்படி இவ்விஷயமறிந்தாரோ, அதெல்லாம் நமக்கு முன்னமே தெரிந்திருப்பதாலும் அப்ரயோஜனவிஷயவிசாரத்தையும், ஆச்சான் பிள்ளையைப் பற்றினால் இவருடைய ஸம்ப்ரதாயஸ்தர்களை இவர் விடவேண்டிவரும் என்பதையும், த்ருதீயகாரிகையின் வாஸ்தவார்த்தத்தையும், ஸாராஸாரஜ்ஞர்களுக்கு இவர் நினைத்திருக்கும் உபாயத்தையும் தள்ளி தத்த்வத்தையும் அச்சிட்டு வெளியிட அனுப்ப உத்தேசம். ஆனாலும், ஸமாநாசாரமாகாமைக்காக, ரக்ஷாவிமர்சநமும், ஸ்ரீ பத்ராதிபருடைய க்ரந்தமும் பூர்த்தியாக வெளிவந்தபிறகு வேணுமானால் அனுப்புவது ந்யாயமென்று நினைத்து இப்போது அனுப்பவில்லை. விதண்டாவாதிகளுக்கு ஸஹாயரான இவர் செய்யும் தேசிகஸம்ப்ரதாயதூஷணங்கள் யாவும் இவருடைய ஸ்வரூபஸ்வபாவங்களையே ஆவிஷ்கரித்து நிற்கின்றன. நமக்கு அவற்றில் கண்ணோட்டம் வேண்டா. ஸ்ரீஸம்ப்ரதாயதூஷணஸம்ரம்பம் இவருக்கு இருப்பது நிஷ்பலமாய் வரும் க்ரமத்தையும் இப்போது வெளியிட்டோம்.

உத்தமூர். தி. வீரராகவாசாரியர்.
22—II—36.

---

(சென்ற 11-வது ஸஞ்சிகையில் பத்திராதிபரால் எழுதப்பட்ட விஜ்ஞாபனம் என்ற விஷயத்திற்கு அடுத்தாப்போல் இதைச் சேர்த்துக்கொள்ளவும்).

'நதீநி தேஹலீ ஜேநு' இங்கே யோகப்பொருள் தான். ரூடி சொன்னால் ரஸம் குறையும். 'கங்கைவார்சடையர்' என்பதால் விசேஷ்யவ்யக்தி ஸ்பஷ்டம். நாமநிர்தேசம் வேண்டியதில்லை. விசேஷ்யத்தைப் பெயர் குறிப்பிடாமல் விசேஷணங்களால் சொல்லுவது ரஸம். ரூடி விவக்ஷிதமென்று தப்பாய் க்ரஹித்துப் பழிக்கமுடியாது.



ஆகையால் ஸ்த்ரீக்கு யாகாதிகாரமில்லை என்று 'லிங்கவிசேஷநிர்தேசாத் பும்யுக்தமைதிசாயனः' என்கிற ஸூத்ரத்தினால் ஐதிசாயனர் என்பவர் லிங்கவிசேஷநிர்தேசத்தைக்கொண்டு புருஷனை அதிகாரியாக எண்ணினார் என்று பூர்வபக்ஷம் பண்ணி, "ஜாதிம் து பாதராயணோऽவிசேஷாத் தஸ்மாத் ஸ்த்ர்யபி ப்ரதீயேத ஜாத்யர்த்தஸ்யாவிசிஷ்டத்வாத்" என்கிற ஸூத்ரத்தினால் ஸித்தாந்தம் செய்யப்பட்டது. அதாவது - ஸ்வர்க்கே காமோ யஸ்ய என்கிற வ்யுத்பத்தியினால் ஸித்திக்க ஸ்வர்க்ககாமநாரூபவைசிஷ்ட்யம் ஸ்த்ரீபுருஷர்கள் இருவருக்கும் துல்யம். லிங்கம் ஸ்த்ரீயை நிவ்ருத்தி செய்யமாட்டாது. அப்பொழுது பசுஸ்த்வாதிதோஷத்தை ஆச்ரயிக்க வேண்டி வரும். ஆதலால் ஸ்த்ரீக்கு வ்யவச்சேதமில்லை என்று பாதராயணர் பக்ஷம் என்பது. இதனால் ஸ்த்ரீபுமான்கள் இருவருக்குமே அதிகாரம் என்பது ஸித்தித்தது.

த்ர்யாநம் விபஜ்ஞவச் என்கிற தர்சநாதிகரணத்தில் 'க்ஷௌமே வஸாநாவக்நிமாததீயாதாம்' என்கிற இடத்தில் வஸாநௌ என்றிருப்பதால், 'ராஜபுரோஹிதௌ ஸாயுஜ்யகாமௌ யஜேயாதாம்' என்கிற இடத்தில் இரண்டு புருஷர்களுக்கு இரண்டு யஜ்ஞங்கள்போல், இரண்டு ஆதாநங்கள் இருவருக்குச் சொல்லப்பட்டது. ஸ்த்ரீக்குச் சொல்லப்படவில்லை என்று பூர்வபக்ஷம் பண்ணி, "ஹ்வாணஸ்ய தாவியாநக்வாச் பத்ந்யா த்விதீயஸ்வவஸ்ராச" என்பது ஸித்தாந்தம். இவ்வாக்யத்தில் க்ஷௌமேவஸாநௌ ரூபம். 'ஸஸ்தே ப்ராஹ்மணோऽக்நீநாதயீத' என்றும், 'பத்ந்யா ஸஹாக்நீநாதத்யாத்' என்று ஆதாநமும், ஸபத்நீகனான புருஷனும் ஸித்திக்கையால், ஸ்வதந்த்ரமான க்ஷௌமதாரணத்திற்கு 'வியாயகம் ஸித்தி ப்ரத்யம். பத்நியைவிட்டு இரண்டாவது சப்தம் உபபன்னம். வஸாநா ச வஸாநஸ்ச வஸாநௌ என்று நிவ்ருத்தம் ஸம்பாவிதமாகையால் என்று. ஆக இரண்டதிகரணங்களாலும் தம்பதிகளுக்கு ஸஹாகாரம் ப்ராஸங்க்யஸ்ருதி என்று ஸித்திப்ப

தால் 'லக்ஷ்ம்யா ஸஹ........கீயதே' என்று உக்த ந்யாயாநு ஸாரிதபுராணத்தினால் ப்ரதிபந்நமான ஸித்தோபாயத்வம் ஶ்ரீக்கு ஸ்வாயத்தம். 'ப்ரக்ருதஸ்தத்க்ருதா ஶரணம் ப்ரபத்யே' என்கிற க்ரியையில் மாத்திரம் பிராட்டிக்கு அந்வயம் கிடையாது என்பவர்களின் அபிஸந்திமர்மம் அறியவேண்டாவோ ?....... ஸித்தோபாயமான பலனை அவள்தானே நேரே தந்தருள்கிறாள் என்று புராணங்கள் சொல்லியிருந்தாலுங்கூட ப்ராபயிதாக்களையும் ப்ராப்தாக்களாகவே புகழ்கிற கட்டளையிலே பொருந்தக் குறையில்லை என்று சொல்லுகிறார். லக்ஷ்மீதந்த்ரவசநம் இருவருக்கும் ஏகரூபமாக ரக்ஷகத்வத்தை விதித்திருக்க, முன் கூறியபடியே இவ்வசனம் அநந்யதாஸித்தமாகவுமிருக்க, இது பிராட்டிக்கு பாரம்பர்யா ஸித்தோபாயத்வத்தை எப்படிச் சொல்லுவதாகும்? இம்மாதிரியான வசநங்களுக்கும் அந்யதாஸித்தி உண்டாகில், நாராயணனுக்கும் தாத்ருக்த்யா உபாயத்வம் சொல்ல விரகில்லாமையால் பிக்ஷுபாதப்ரஸாரணந்யாயமாய் முடியும். 'உபாயபூர்வகம் ஶரணம் ப்ரபத்யே' என்கிற கணக்கிலே 'அயத்தில் வரண ஶரணம் ப்ரபத்யே' என்றதில் ஶ்ரீக்கும் அந்வயம் இருந்தாலென்ன குடிகெட்டுப் போகும்?' என்று கேட்கிறார். 'ஶ்ரியா ஸஹ நாராயணம்' ஶரணம் ப்ரபத்யே என்றிருந்தாலொழிய, ஶ்ரீக்கு ப்ரபத்தவ்யதாரூபக்ரியையில் நியதாந்வயம் ஏற்பட மாட்டாதென்கிற இவர் ப்ரதிஜ்ஞை கெட்டுப்போய்விடாதோ ? அயத்தில் ப்ரபத்யே என்கிற இடத்தில் ஸாக்ஷாதுபாயத்வமே விவக்ஷிதமாகையால் ஶ்ரீக்கு அந்வயம் கொண்டால் புருஷகாரத்வமாத்திரமே அவளுக்கு என்பதை எப்படி இவர் ஸாதிக்க முடியும் ? ஶ்ரீக்கு புருஷகாரத்வத்தையும் நாராயணனுக்கு ஸாக்ஷாதுபாயத்வத்தையும் வாக்யபேதமன்றியில் ஸம்பாதிக்க முடியாதன்றோ ? ப்ரக்ருதவசநத்தினால் 'ஸர்வஸித்தாந்தே வேதாந்தேऽபி ச கீயதே' என்று ப்ரமாணப்ரதிபந்நரக்ஷகமாய் நிரூபிக்கப்பட்ட பிராட்டியின் ஸாக்ஷாதுபாயத்வம் இவரொப்புக்கொள்ளாவிட்டாலும் ஸித்



தித்தே விடும். இவர் பக்ஷத்தில் உபேயத்வம் போல ஸாதநத்திலும் உபாயத்வத்திற்குக் குறையில்லை என்பதை மேலதிகாரத்தில் நிரூபிக்கிறோம்.

லக்ஷ்ம்யா ஹி ப்ராப்யதா நாத விஶேஷேண ப்ரஸாதிதா ।
லக்ஷ்ம்யாஸ் ஸாக்ஷாதுபாயத்வம் ஶிஷ்டாக்ரேண ப்ரதர்ஶிதம் ॥
லக்ஷ்ம்யுபாயத்வஸம்ஸித்திநாமா சதுர்த்தோऽதிகார: ॥

---

## ஐந்தாமதிகாரம்.

---

லக்ஷ்ம்யா ஈஶ்வரகோடித்வஸாதநே தேஶிகோக்தித: ।
அந்யதாஸித்திநைவ ந பாத்யதே கிமாயதே ॥

இனி ரஹஸ்யரத்னாவளீ முதலிய ஶ்ரீஸூக்திகளால் ஶ்ரீதேஶிகனுக்கு ஜகத்காரணத்வமோக்ஷப்ரதத்வாதிகள் எம்பெருமானொருவனுக்கே உரித்தாயிருப்பதாயும், பிராட்டிக்கு இல்லை என்றும் திருவுள்ளமேற்படுகிறது என்கிற வாதத்திற்கு ஸமாதானம் உரைப்போம். பிராட்டி ஈஶ்வரகோடி என்பதை ஶ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் "ஶேஷீஶ்வரகோடி: உபயவிஶிஷ்டவிஶேஷ்யாதிரேகேண தல்லக்ஷணோபபத்தே:" என்று அருளிச்செய்தார். மேலும் தத்த்வத்ரயசுலுகாதிகாரத்திலும், ஶ்ரீந்யாயஸித்தாஞ்ஜநத்திலும் ஜீவேஶ்வரதத்த்வங்களை நிரூபிக்கையில் ஈஶ்வரநிரூபணப்ரகரணத்திலேயே பிராட்டியை நிரூபணம் செய்தருளுகிறது 'பிராட்டி ஜீவகோடி யன்று' என்ற திருவுள்ளத்தினாலேயன்றோ. இங்கு ந்யாயஸித்தாஞ்ஜந ஶ்ரீஸூக்தியாவது:- "ஜ்ஞாநாநந்தாத்யஸாதாரணாகாரஜ்ஞநக ஶேஷித்வஶரண்யத்வப்ராப்யத்வாதிஸாம்யாச்ச ஸாம்யம் நிரபாயரூப: ப்ரக்த:, ஜகத்காரணத்வம் அநூபபந்நம் ஸத்யஸங்கல்ப: ப்ரகாரைக்யேந ஸர்வஸ்ய ப்ரகாஶமாநத்வாத் ப்ரக்ருதிப்ரயாம் ஸ்ரீ[illegible] ராதீஷோதிதஸ் ய்யா விதிப்ரோதம் ஸ்ரீ[illegible]ஶ்வஸ்ய[illegible]ராஸ ஸதோஸ்தம்

தி: ப்ரத்யக்ஷேஷு பரோக்ஷேஷு வா தாக்ஷிதேஷு வா நிவ்ருத்த ஹ்ருதி: ஸக்தி ஸ்வாதாஸ்யஞ்... ஸர்வத்ர ப்ராதிகூல்யவர்ஜனம் ஸாந்நித்யமஸ்தி ஸஹகாரிணீ தாத்ருஸீ தயா வா ப்ரகாசம் ஸஹகாரித்வா ஹித்ருதாயா வா" என்பது. இதில் ஜகத்காரணத்வம் உபாயத்வம் உபேயத்வம் முதலியவை பிராட்டிக்கு ஈஸ்வரனோடு ஸமம் என்றும், இருவரும் சேர்ந்து யாகத்தில் அக்னீஷோமாதிகளைப்போல் ஹவிஸ்ஸையுண்ண உத்தேஸ்யர்கள் என்றும் ஸுஸ்பஷ்டமாய் அருளிச்செய்யப்பட்டது. ஸஹதர்மசாரிணீ யஜேத என்றிருக்கச்செய்தேயும், ப்ராதிபதிகத்தின் ஸ்வபாவத்தைவிட்டு ஸ்த்ரீக்கும் அதிகாரம் என்று ந்யாயவித்துக்கள் நிர்ணயித்தார்கள். அந்த ந்யாயத்தினால் ஸம்பந்திக்கும் ஸாம்யமாகையால் பிராட்டிக்குப் பிராப்தி உண்டாயிருக்க ப்ரமாணவசனங்களில் ஈஸ்வரன் ஒருவனே தஞ்சமென்றாலும் ஏகன் யஜமானன் என்றாப்போலே பத்னி வ்யாவ்ருத்தியம் சொல்லவொண்ணாது. ஆசார்யன் தாமும் "யாகத்தில்போலே வதிப்யாநமாக ஸாஸ்த்ரங்களில் உபதேஸங்களுக்கும் ஏககன் யஜமானன் என்னுமாப்போலே ஏகத்வ வசனத்திற்கும் குறையில்லை" என்று அருளிச்செய்தார். "தஸ்ய ஹவிர்வாதாம் ந வ்யபநயந்தே" என்றும், 'எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லித்தாமென்றும் பூர்வாசார்யர்கள் ஸாதித்தார்கள்" என்று ஸாரஸங்க்ரஹத்தில் ப்ரமாணோபந்யாஸம் செய்தருளப்பட்டது. இப்படி ஸ்ரீசப்தமில்லாத விடங்களிலேயே ஸ்ரீக்குப் பிராப்தி உண்டாயிருக்க, ஸ்ரீமானான நாராயணன் ஒருவனுமே ஸர்வஜீவர்களுக்கும் தஞ்சம் என்று ரஹஸ்யரத்னாவளியிலும், பத்ந்யாதிவிசிஷ்டனான நாராயணன் ஒருவனுமே அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளைப் பண்ணுவன் என்று அதன் விவரணத்திலும், ஸ்ரீமானுக்குப்போல ஸ்ரீக்கும் அநிஷ்டநிவ்ருத்த்யாதி கர்த்ருத்வம் ஸ்ரீ தேசிகனால் அருளிச்செய்யப்பட்டிருப்பது அவதாரணீயம்.

139901



ளுக்கு இஷ்டமான பஹுவ்யக்திகளும் பலவென்று ரஸம். விக்ரஹவாக்யத்தில் 'தியஃ' என்று பன்மை விவக்ஷிதம். ப்ரதிதினமும் த்ரிஷவணமும ஜபிக்கும் காயத்ரியில் 'தியஃ' என்னும் பன்மையை மறப்பரோ? ஸவிதாவின் தேஜஸ்ஸு எப்படி யீக்களை ப்ரசோதனம் செய்யுமோ, அப்படியே தேவியின் கடாக்ஷஸம்பந்தம் ஹ்ருதயகமலத்தை விகஸிப்பித்து அநந்தபஹுவ்யக்திகளை ப்ரசோதனம் செய்யுமென்பது கவி ஹ்ருதயம். 'அநந்தம் வை மந: அநந்தா வை விஸ்வேதேவா:' என்று சொல்லி மனதை விஸ்வேதேவர்களாக ஸ்ருதி உபாஸிக்கச்சொல்லிற்று. எம் உரையை ஆகாசம் என்கிறார். வாய்க்குச்சர்க்கரை. 'ஆகாஸ இவ நிஷ்ப்ரபஃ' என்று வால்மீகி. எறியப் பார்க்கும் சேறு ஒட்ட இடமில்லாமல் இவர் மூஞ்சியிலேயே விழுந்து சேருக்கும். உதித்த இடத்திற்கே திரும்பும். இந்த 'ஆஜந்மபாபரோகி'யால் தூஷிக்கப்பெறுவதினும் ஸௌபாக்யம் வேறு உண்டோ? இவர் தூஷிக்க தூஷிக்க ஸந்துஷ்டராவோம்.

---

Registered No M· 3343

## விண்ணப்பம்.

இந்த ஸபையின் ஸம்வத்ஸரோத்ஸவம் ஸ்ரீர
கத்தில் இந்த டிஸம்பர் மாதம் 22, 23, 24, 25, தேதி
களில் வழக்கம்போல் ஸ்ரீலக்ஷ்மீ நருஸிம்ஹன் ஸந்நி
யிலும், கீழஉத்திரவீதி ஸ்ரீ தேசிகன் ஸந்நிதியிலு
நடைபெறும். எல்லோரும் க்ருபையாய் எழுந்தருள
நடத்திவைக்கவேணும்.

---

ஸ்ரீதேசிகன் அருளிச்செய்த "ஸுபாஷிதநீவி
உரையுடன் வெளிவரும். இதற்கு ஸ்ரீமான், கவர்ன்
மெண்டு அஸிஸ்டெண்டு ஸிகரெடரி கமலாபுரம் ராம
ஸ்வாமி அய்யங்கார் பொருளுதவி செய்வதாக வாக்
ளித்திருக்கிறார்.

---

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய க்ரந்தங்கள் எல்லாம்
கிடைக்குமிடம்.— டி. டி. கோபாலாசாரியர்,
272, பைக்கிராப்ட்ஸ் ரோட்,
ராயப்பேட்டை, சென்னை.

ஸ்ரீ:
உத்தரவாதமுள்ள
உயர்ரக வைரங்களுக்கும்
பொனவெள்ளி நகைகளுக்கும்
ஜரிகை பட்டு வேஷ்டிகள்
சேலைகளுக்கும்
ஸ்ரீ ஆண்டாள்
ஜுவெல்லரீஸ் லிமிடெட்.
109, சைனாபஜார் ரோட்,
மதராஸ்.

Printer.— M. K. Parthasarathi Iyengar,
Edited and Published at Srirangam by A. V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.